ஸுபாநு ஹு
வைகாசி - ஆனி மீ

ஸம்புடம் - 2
ஸஞ்சிகை - 6

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடம் பத்ரிகை]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 JUL 1943
MADRAS

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

: பிரசுரிக்குமிடம் :

...ராமஸ்வாமி தெரு, தியாகராயநகர்,

மதராஸ்

JL
N43·2/6.

வ...
ரூபா...

June, 1943
Vol. 2, No. 6

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

		பக்கம்
1.	திருப்பாவை	210
2.	ஸ்ரீ பிள்ளைபாக்கம் அழகியசிங்கர் வைபவச்சுருக்கம்	217
3.	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	223
4.	நாராயணனே பரதத்வம்	229
5.	ஸ்ரீ அஹோபிலம் விஷயங்கள்	233
6.	கலங்காக் கருணை	240
7.	செய்திகள்	243
8.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	245
9.	கடோபநிஷத்	81

ஸ்ரீ:

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்

1. மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் அச்சுப் பதிப்பிக்கும்படியாக வ்யாஸங்களைச் சுருக்கி எழுத வேண்டுமென்றும், நல்ல காகிதத்தில் தெளிவாக ஒரே பக்கத்தில் எழுதி அனுப்ப வேண்டுமென்றும் ப்ரார்த்திக்கிறோம்.

2. ஏற்றுக்கொள்ளப்படாமல் இருக்கும் வ்யாஸங்களெல்லாம், தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப் பட்டிருக்கும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வாங்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்யவேண்டுமென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடைய நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருக்கிறது. அவகாசமும் ப்ராப்தமாகும்பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வாங்கள் க்ருபையுடன் க்ஷமிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸம்பாதகர்.



OFFICE OF THE REGISTRAR
12 JUL 1943
MADRAS

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌶𑍍𑌰𑍀𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 2	𑌸𑍍𑌵𑌭𑌾𑌨𑍁 𑌸𑌂 வைகாசி - ஆனி மீ	ஸஞ்சிகை 6

‘𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌗𑌾𑌰𑍁𑌡𑌶𑍈𑌲𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌃 ।
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾 𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌂
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥’’

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபிலமடம் பத்ரிகை]

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆஶாஸந அநுஶாஸநங்கள்

𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑍋𑌤𑍍𑌥𑌿𑌤𑌾 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍇𑌣 𑌜𑍀𑌯𑌾𑌦𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌮𑍍 ॥
𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌭𑌕𑍍𑌤𑌸𑌨𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌗𑍇𑌹𑍇 𑌸𑌦𑌾 𑌵𑌸𑍇𑌤𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑌾 𑌸𑌹 ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த “ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா” என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்களுள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த “ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா” என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

திருப்பாவை

[ஸ்ரீ. உப. தி. ஈ. சடகோபாசார்யர் திருப்பாப்புலியூர்.]

(ஸம்புடம் 2, ஸஞ்சிகை 3, பக்கம் 82 - தொடர்ச்சி)

முன் பாசுரத்தில் அகிஞ்சநர்களான ஆயர் சிறுமிகள் உஜ்ஜீவிப்பதற்கு அநுகுணமாக வாமனனாயிருந்து த்ரிவிக்ரமனாய் ஓங்கி உலகளந்த உத்தமனது திவ்யாத்புதாகாரத்தை த்யாநித்துப் போற்றி நீராடினால் நாடெங்கும் காலமழை பெய்து ஸர்வப்ரகாரமான ஸம்பத்துக்களும் வ்ருத்தியாகும் என்று தங்களுடைய வ்ரதாநுஷ்டாநத்தினால் ஏற்படும் ஆநுஷங்கிகபலத்தைக் கூறினார். அநந்தரம் இப்பாசுரத்தில் 'திங்கள் மும்மாரி பெய்து' என்று முன்பு ப்ரஸ்தாவிக்கப்பட்டதின் ப்ரகாரத்தை ஸஹேதுகமாய் விஸ்தரிக்கிறார். அல்லது முன் பாசுரத்தில் ஸாதாரணமாய் வர்ஷர்த்து தவிர மற்ற காலத்தில் மழை பெய்வ கூறி இப்பாசுரத்தில் வர்ஷாகாலத்தில் விசேஷமாய் மேகங்கள் வர்ஷிப்பதை விஸ்தாரமாய் வர்ணிக்கிறார் என்றும் விவேகிக்கலாம்.

"ஆழிமழைக் கண்ணா வொன்றுநீ கைகரவேல்
ஆழியுட்புக்கு முகந்து கொடார்த் தேறி
ஊழி முதல்வ னுருவம்போல் மெய்கறுத்துப்
பாழியந் தோளுடைப் பற்பநாபன் கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல்
வாழ வுலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்."

ஆழிமழைக் கண்ணா!—ஸமுத்ராகாரமாய் நாற்புறமும் பரவி வர்ஷிக்கும் கிரணங்களையுடைய பர்ஜந்ய தேவனே! இங்கு, 'கண்' என்பது 'சல்லடைக் கண்', 'ஊற்றுக் கண்' என்பதிற்போல் ரந்த்ரவாசகமாகும். இத்தால் நாளிகள்போன்ற வர்ஷாநுகூல கிரணங்கள் விவக்ஷிக்கப்படுகின்றன. 'நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து' என்று முன் கூறியதற் கநுகுணமாக 'ஸமுத்ர வ்யாபித்து வர்ஷிக்கும் கிரணங்களையுடையவனே!' என்று இப்போது ஸம்போதிக்கிறார். 'யாபிராதித்ய ஸ்தபதி ரஶ்மிபிஸ்தாபி: பர்ஜந்யோ வர்ஷதி' என்று ஶ்ருதியிலும், அதன் உபப்ரும்ஹணமாக

'நவமாஸத்ருதம் கர்ப்பம் பாஸ்கரஸ்ய கபஸ்திபி: |
பீத்வா ரஸம் ஸமுத்ராணாம் த்யௌ: ப்ரஸூதே ரஸாயநம் ||'

என்றும், 'பாத்யேஷ தபத்யேஷ வர்ஷத்யேஷ கபஸ்திபி:' என்று ஸ்ரீராமாயணத்திலும்,

'பாரா ஸ்ருஷ்டானி ஹ்ருதானி வீர்யேண கருணயா ஹ்ருதம் |
ததோऽந்நம் பவதி தேஷாம் ஸவிதா ஸவிதா யதா ||
கத்வோத்தராயணம் தேஜோ ரஸாநுத்ருத்ய ரஶ்மிபி: |
தக்ஷிணாயநாவ்ருத்தோ மஹீம் வர்ஷதி வாரிணா ||'

என்று மஹாபாரதத்திலும்,

'க்ஷௌ காலாஹிதம் யஜ்ஜ்யோதிர்பாநுதேயம் வஸு |
ஸ ஏவாஹிதேக்ஷூதாநாமேவ பர்ஜந்ய: கால ஆகதே |'

என்று ஸ்ரீ பாகவதத்திலும் விவரிக்கப்பட்டபடி, ஸூர்யனே வ்ருஷ்டிக்கும் காரணமாகிறபடியால் அவன்தானே க்ரீஷ்மத்தில் ரஸாதானம் பண்ணும்போது தபனனென்றும் வர்ஷா காலத்தில் ரஸவிஸர்க்கம் செய்யும் போது பர்ஜந்யன் என்றும் வ்யபதேசிக்கப்படுகிறான் என்கிற ஶாஸ்த்ரார்த்தமும் இங்கு ஸூசிக்கப்பட்டது.

ஒன்றுநீ கைகரவேல் ஆழியுட்புக்கு முகந்து கோடு—நீ உனது கிரணங்கள் ஒன்றையும் மறைக்காது ஸமுத்ரத்துக்குள் புகுந்து ஜலத்தை ஆகர்ஷித்துக்கொண்டு கொடு. க்ரீஷ்மத்தில் ஸூர்யன் பூர்ண ரஶ்மிகளுடன் ஜலத்தை க்ரஹித்தால்தான் வர்ஷாகாலத்தில் ஸம்ருத்தமாய் மழை பெய்யும் என்கிற லோகாநுபவம் இங்கு நிர்தேசிக்கப்பட்டது. 'கை' என்பதற்கு தத்ஸமானார்த்தமான 'கர' ஶப்தத்துக்குப் போல் கிரணம் என்றும் பொருள் உளது. அதுதான் இங்கு விவக்ஷிதம். ஸூர்யன் மற்ற பதார்த்தங்களைக் கிரண த்வாரா ஸ்பர்சிப்பதால் இவ்வர்த்தம் பொருந்தும். 'நீ கை ஒன்றும் கரவேல்' என்று அந்வயம்.

ஆர்த்தேறி = ஶப்தித்துக்கொண்டு உயரக் கிளம்பி. ஒரு யானை தடாகத்தி லிறங்கித் தன் துதிக்கையால் களகளவென்று சப்தித்துக் கொண்டு தண்ணீர் குடித்துக் கரை ஏறுவதுபோல் என்று த்வநிக்கிறது.

'க்ஷாரஸ்ய ப்ரயாதிவஸே தேவாரண்யஷு ஸாநும்
பத்ரீக்ருதாவநிதமஜைர்ப்ரேக்ஷணீயம் ததர்ஶ'

என்று மஹாகவி கூறிய உபமானம் இங்குக் குறிக்கத்தகும். வேனிற் காலத்தில் ஸூர்ய கிரணங்களால் ஆகர்ஷிக்கப்பட்ட ஸமுத்ர ஜலம் ஆவியாக உயரக் கிளம்பி ஆகாயத்தில் மேக ரூபமாக மாறுகிற தென்கிற அநுபவம் இங்கு வெகு ஸுந்தரமாய் வர்ணிக்கப்பட் டிருக்கிறது.

ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்து—ஜகத்காரண பூதனான நாராயணனது திவ்யமங்கள விக்ரஹத்தைப்போல் உனது ஆகாரமும் நீல வர்ணத்தை யடைந்து. ஊழி என்பதற்கு அளவிறந்த முற்

காலம் என்பது பொருள். இத்தால் எம்பெருமான், எல்லாவற்றையும் அளவிடும் தன்மையுள்ளதும், தான் மற்றொன்றினால் வரையறுக்கத் தகாததுமான காலதத்வத்தாலும் அளவிடக் கூடாதவனுகையால், ஸமஸ்தமான இதர பதார்த்தங்களுக்கும் முதற் காரணம் என்பது கூறப்பட்டது. இதை வைத்தே நிருபபதமாக முதல்வன் என்று வ்யபதேஶித்தது. ‘ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத் ஏகமேவாத்விதீயம்’ இத்யாதிகளான ஶ்ருதிவாக்யங்களும் தத்விவரணரூபமான ‘மேவித் தொழும் பிரமன் சிவனிந்திரனாதிக்கெல்லாம் நாபிக்கமல முதற் கிழங்கே’, ‘ஆதிபகவன் முதற்றே யுலகு’ என்னும் ஸூக்திகளும் இங்கு அநுஸந்திக்கத்தக்கவை. ஆஸந்ந கர்ப்பிணியா யிருக்கும் ஸ்த்ரீக்கு தேகம் ஶ்யாம வர்ணத்தை யடைவதுபோல் ஜலபூரிதமான வர்ஷாகால மேகமும் ப்ரளய காலத்தில் ஜகத்தைக் குக்ஷியில் தரித்த பகவானும் நீல வர்ணத்தை யடைவது உபபன்னமேயென்று த்வனிக்கிறது.

> “ஸகலம் த்ரைலோக்யஸ்திதயே ஶ்யாமயா
> பிபர்தி ஶார்ங்கம் பத்மம் பத்மநாபந: |
> ஸமுத்ராய ரக்தம் ரஜோவ்யூஹிதம்
> க்ருஷ்ணம் ச வர்ணம் ததோ ஜநார்தனே ||’

என்கிற வாஸுதேவ வசநம் இதற்கு ஸம்வாதகமாகும். ‘பதி: ப்ரதீத: ப்ரஸவோந்முகீம் ப்ரியாம் ததர்ஶ காலே திவமப்ரிதாமிவ’ என்று மஹா கவியும் கர்ப்பிணியை நீர்கொண்ட மேகத்துக்கு ஒப்பிடுகிறானிறே.

இப்படி: ப்ரளய தசையில் ஶ்யாமபூயிஷ்ட ஸஹஜமத்தான பகவானுடைய திருமேனியை அநுஸரித்துப் பிறகு ‘ஸமுத்ராய ரக்தம் ரஜோவ்யூஹிதம்’ என்றபடி அவரது திருவுதரத்திலிருந்து நாபீபத்மம் வெளிக்கிளம்பி அதிலிருந்து சதுர்முகனாகிற குழந்தை ப்ராதுர்பவித்தவுடன் அன்றீன்ற பசுவுக்குத் தன் கன்றைப் பிறர் கை தீண்டாவண்ணம் காக்கும் விஷயத்தில் ஒரு அபிநிவேஶமும் ஸம்ரம்பமும் ஏற்பட்டுக் கிட்ட அணுகுபவரை அது தன் கொம்புகளால் குத்தி விலக்க உத்யுக்தமாய் நிற்பதுபோல், பகவான் தனது அபத்யத்தை ரக்ஷிக்கவேண்டியதற்காகத் தம் திருக்கைகளில் ஶங்க சக்ராதி திவ்யாயுதங்களை ஏந்தி ரக்ஷணோந்முகராய் விளங்கும் அவஸ்தா விசேஷத்தை நிரூபிக்கிறார்.

பாழியந் தோளுடைப் பற்பநாபன் கையில் ஆழிபோல் மின்னி
வலம்புரிபோல் நின்றதிர்ந்து

இத்யாதியால். பாழி - பலிஷ்டமான, அம் - அழகிய, தோளுடை - திருத்தோள்களையுடைய; ‘ஸஹஸ்ராக்ஷஸஹஸ்ரபாஹவே’ என்கிறபடி பகவானுடைய திருமேனியில் ஒவ்வொரு அங்கமும் அவனது திருக்கல்

யாணகுணங்கள் பரத்வஸூசகங்களாகவும் ஸௌலப்ய ஸூசகங்களாகவும் இருவகையாகக் கலந்து ரத்நாகரங்கள்போல் பரஸ்பரோபகாரகமாக இருந்து ஆச்ரிதர்களைத் தேற்றுவதுபோல் இணையற்ற பலத்தையும் ஸௌந்தர்யத்தையும் சேர்த்துக் கொண்டிருப்பதால் ஓங்கி வளர்ந்து கிளைத்துப் பரவி இலையடர்ந்த சாயா வ்ருக்ஷம்போல் தாபாக்ராந்தர்கள் அணுகுவதற்கு ஸுக்ரஹம் ஸந்நிதாநமா யிருக்கும்படி இந்த விசேஷண த்வயத்தால் ஸூசிதம். பற்பநாபன் கையில் ஸ்ரீ பத்மநாபனது திருக்கைகளி லிருக்கும், ஆழிபோல் மின்னி ஸ்ரீ ஸுதர்சனாழ்வான்போல் உனது மின்னல்களால் ப்ரகாசித்து, வலம்புரிபோல் நின்றதிர்ந்து ஸ்ரீ பாஞ்சஜந்யம்போல் தீர்க்க கம்பீரமாய் கோஷித்து; இந்த வர்ணந க்ரமம் முதலில் மின்னல் தோன்றிப் பிறகு இடி முழங்கும் ஸ்வபாவஸித்தியை அநுஸரித்ததாகும். முன் கோடை காலத்தில் மேகம் சப்தித்துச் செல்வதை 'ஆர்த்தேறி' என்றும், இப்போது வர்ஷா காலத்தைக் குறிக்கையில் 'நின்றதிர்ந்து' என்றும் விவரணம் செய்திருப்பது காவ்யரஸஜ்ஞர்கள் ஸம்மாநிக்கத் தக்க ஸ்வபாவோக்தியாகும். இவ்விதம் வர்ணநா ஸௌஷ்டவத்தால் ஜகத்ஸ்ருஷ்டியை ஸூசித்துப் பிறகு தத்ரக்ஷணக்ரமத்தை நிர்தேசிக்கிறார்

தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல் வாழ வுலகினில் பெய்திடாய்—என்று. உலகினில் வாழ - லோகத்திலுள்ளோர் வாழுமாறு; சார்ங்கம் உதைத்த சரமழைபோல் தாழாதே பெய்திடாய் - சார்ங்கமென்று ப்ரஸித்தமான பகவானுடைய திவ்ய தநுஸ்ஸானது நாற்புறமும் எறியும் பாணவர்ஷம்போல் இடைவிடாது பெய்வாயாக. 'உதைத்த' என்றதால், மழை மேலிருந்து கீழே வர்ஷிக்கும் ப்ரகாரம் ஸூசிக்கப்பட்டது; சார்ங்க பக்ஷத்தில் அதன் பாணங்களுக்கு லக்ஷ்யமானவையெல்லாம் அதை யபேக்ஷித்து நிக்ருஷ்டங்களென்பது த்யோதிதம். சார்ங்கத்தின் பாண வர்ஷத்தால் துஷ்க்ருதிநாச பூர்வமாய் ஸாதுபரித்ராணம் நடந்தேறுவதுபோல் மழை பெய்வதால் ஸஸ்ய வ்ருத்திக்கு ஹாநியைச் செய்யும் பூச்சி பூண்டு முதலியவை அழிந்து பயிர்கள் செழித் தோங்கு மென்பது ஸூசிதம்.

'ஜந்மாத்யஸ்ய யத:' என்ற ப்ரஹ்மஸூத்ரத்தில் ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரம் என்கிற க்ரமம் நிர்தேசிக்கப்பட்டும் 'தஜ்ஜலாந்' என்கிற ச்ருதிவசநத்தில் ஸ்ருஷ்டி ஸம்ஹாரம் ரக்ஷணம் என்கிற க்ரமம் கூறப்பட்டும், முன் உதாஹரிக்கப்பட்ட 'ஸர்வம் த்ரைலோக்யஸ்திதயே' இத்யாதியான ஸ்ரீ பாகவதஸ்லோகத்தில் ஸ்திதிஸ்ருஷ்டிஸம்ஹாரம் என்கிற வரிசை அநுஸரிக்கப்பட்டு மிருக்க, இங்கு ப்ரதமம் ஸ்ருஷ்டி ரக்ஷணம் என்கிற ஸ்வபாவஸித்தியைக் கைக்கொண்டதன் அபிப்ரா

யம் ஹமவானுடைய ஸூர்வாபூவாஹம் மேன்மேலும் வ்ருத்தியடையும் ஸரணியையொத்துத் ஒஸாஹெஷங்களை வரிசைப்படுத்துவதே இங்கு சித மென்றும், ரக்ஷணத்தில் ஓரக்ஷவூ ஊாநமும் சேர்ந்திருப்பதால் அதற்கு மேற்பட்ட புருஷார்த்த மில்லாததுபற்றி அதைக் கடைசியில் குறிப்பது யுக்தமென்றும் தோற்றுவிப்பதேயாகும். அநந்தரம் இப்படிப் பெய்வதால் தமக்குண்டாகும் பூயொஜந விஶேஷத்தைப் பேசுகிறார்.

நாங்களும் மார்கழி நீராட மகிழ்ந்து என்று நாங்களும் ஆநந்த ஹரிதைகளாய் மார்கழி நீராடுவோமாக.

ஏலோரெம்பாவாய்—முன்போலவே.

இத்தால்

“ஷெவாநு ஹாவயதாநெந தெ ஷெவா ஹாவயஙூவ: ।
வரஸூரஂ ஹாவயஙூ: ஶ்ரெய: வரவோஷ்யு ॥”

என்று ஸ்ரீதாவாரூன் அருளிச்செய்தபடி, வூதஸூமாகத் தமது வூதாநுஷ்டாநத்துக்கு ஏற்படும் ஆநுகூல்யம் கூறப்பட்டது. இதைக் கொண்டே ‘யஜ்ஞாஹூவதி வஜநு:’ என்றபடி வ்ருஷ்டி ஹேதுவாகக் கூறப்பட்ட யஜ்ஞகோடியில் இவ்ரதமும் உட்பட்டு நிற்கு மென்றேற்பட்டது. முன் பாசுரத்தில் தாம் வூதாநுஷ்டாநம் பண்ணின மாத்ரத்தில் காலவ்ருஷ்டியால் ஜனங்களுக்கு க்ஷேம முண்டாகுமென்று பொதுவாகக் கூறப்பட்டது. இப்பாசுரத்தில் வர்ஷா காலத்தில் ஸம்ருத்தமான வ்ருஷ்டியுண்டாய் அதனால் ஜலாஶயங்கள் பூர்ணமாவதாலும், மற்றும் முன் சொல்லப்பட்ட ஸஸ்ய கோதநாதி ஸம்ருத்தியாலும் மகிழ்ந்து நீராடும்படியான உபகாரம் தங்களுக்கே கிடைக்குமென்று பேசப்பட்டதுடன் ஸுயஂபூயொஜநமான ஹமவஷெகாஙு கைங்கர்யமாய்த் தாம் ஸயூவஸித்த இவ்வர்த்தத்தை அநுஷ்டிக்கும் விஷயத்தில் ஸவநிய ஸௌகர்யங்களும் தந்தருளவேணுமென்று பூாயிப்பது வாஙெஷகாஙுத்துக்கு விருத்த மன்றென்கிற ஶாஸ்த்ராயத்தை இங்கு ‘பெய்திடாய்’ என்று கோருவதால் வெளியிடுகிறார். ‘காமீர்‌ரா யஜெத வ்ருஷ்டிகாம:’ என்கிற ஶ்ரௌத வாக்யம் சில ஸமயங்களில் அநாவ்ருஷ்டி நேர்ந்தால் அதைப்பரிஹரிப்பதற்காக ஏற்பட்ட விசேஷவிதியாகுமே தவிர ஸாமாந்யமாக ஷெவதாபூஸாயநமாக அநுஷ்டிக்கும் யஜ்ஞங்களால் காலவ்ருஷ்டி ஏற்பட்டு, லோகத்துக்கு க்ஷேமம் உண்டாகும் என்கிற ஸாமாந்ய விதியை வ்யர்த்தமாக்காது. ‘யஜி ஷெவபூஜாயாம்’ என்கிற யாதுவிலிருந்து பந்நமான யஜ்ஞஶப்தம் ஷெவபூஜை யனைத்தையும் ஸங்க்ரஹிப்பதால் வாஷெவதா பூஜை அதில் அந்தர்பூத மென்பதற்குத் தட்டில்லை.

ஆனால் தேவதாந்தர பஜனைக்கும் பரதேவதா பஜனைக்கும் வாசி யென்னவென்றால் அந்யதேவதா பஜனை ஃபலோத்தேச மின்றிக்கே யாரும் அநுஷ்டிக்க ப்ரஸக்தியில்லை; அநுஷ்டித்தால் ஃபலமுமில்லை; பரதேவதா பூஜையோ வென்றால் ஸ்வரூப ப்ராப்த மானதாகையால், அதை சேஷபூதன் தனது நிருபாதிகசேஷி விஷயத்தில் அநந்ய ப்ரயோஜநமாய் அநுஷ்டிப்பது அத்யந்தம் உபபந்நமாகும்; அப்படி ஸ்வயம் ப்ரயோஜநமாய் ஆச்ரயித்தபோதிலும் 'சரீராரோக்யமைச்வர்யம்' இத்யாதிகளிற்படி பரமோதாரனான பகவான் தன்னை ஆராதிப்பவர்களுக்கு அவர்கள் கோராதபோதிலும் தாமாகவே ஆநுஷங்கிகமாகக் காமதேநுக்குப்போல திவ்யபோகங்களைத் தந்து களிக்கிறான் என்பதுதான். 'அஹமேவ கதிஸ்தேஷாம் நிராசீ꞉ கர்மகாரிணாம்' என்று பகவான் அருளிச்செய்தபடி அவனொருவனையே ப்ராப்யமாகக் கொண்ட பரமைகாந்திகள் விஷயத்தில்

'அநந்யாச்சிந்தயந்தோ மாம் யே ஜநா꞉ பர்யுபாஸதே |
தேஷாம் நித்யாபியுக்தாநாம் யோகக்ஷேமம் வஹாம்யஹம் ||'

என்று அவன்தானே அவர்களுடைய யோகக்ஷேமம் தன் சுமையாகு மென்று ப்ரதிஜ்ஞை செய்திருப்பதே இதற்கு ப்ரமாணமாகும்.

'மார்கழி நீராடி மகிழ்ந்து' என்கிற பாடத்தில் மார்கழி நீராடி மகிழ்வோமாக என்று அர்த்தமாகும். நிரபாயமாய் எங்களுடைய மார்கழி நீராட்டம் நடந்தேறியதுபற்றி நாங்கள் அடங்காக் களிப்படைவோமாக.

ஸாதாரணமாய் லோகத்தில் கவிகள் பெருமாளுடைய திருமேனிக்கு 'மேகச்யாம꞉' என்பதிற்போல் மேகத்தை உபமாநமாகவும் அவ்விதமே அவனது சக்ராயுதத்துக்கு மின்னலையும் சங்கத்வநிக்கு மேககோஷத்தையும் சரௌகத்துக்கு மேகவர்ஷத்தையும் உபமாநமாக வர்ணிப்பது வழக்கமாயிருக்க, இங்கு உபமாநோபமேய பாவம் மாறி நிற்பது நோக்கத்தகும். இத்தால் அவ்வோ குணங்களின் வைலக்ஷண்யம் ஸமஸ்தகல்யாண குணமஹோததியான பகவானொருவனிடமே குறைவற்றுள தென்றும் மற்றெவ்விடத்திலும் அவை குறைவுற்றே யிருக்குமென்றும் மற்றொன்றை அவனுக்கு உபமாநமாகக் கூறுமிடத்தில் 'யதேந ஸத்ருச்யதே', 'சக்ரதுல்யபராக்ரம꞉' என்பதுபோல் தாத்பர்யமில்லாமல் ஹீநோபமையாகவே ப்ரயோகிக்க வேண்டியதாகிற தென்றும் த்யோதிதம். மேலும் ப்ரத்யக்ஷத்தை உபமாநமாக வைத்துப் பரோக்ஷத்தை உபமேயமாக்கும் ந்யாயத்தை

அநுஸரித்து நமக்குப் புலப்படும் வஸ்துக்களில் அந்தந்த குணங்களில் சிறந்தவைகளை உபமாநமாகக் குறித்து நம் புலன்களுக்கு விஷயமில்லாத பகவானை உபமேயமாக்கி வ்யவஹரிப்பது உசிதமென்றும் நிர்வஹிக்கப் பொருந்தும். அக்கணக்கில் இங்கு ஆண்டாளுக்குப் பகவானுடைய திருமேனியும் அவனது திவ்யாயுதங்களும் பாவநாப்ரகர்ஷமடியாக விசதப்ரத்யக்ஷ விஷயமாயிருந்தது பற்றி,

'நீலமேகாச்ரிதா வித்யுத் ஸ்புரந்தீ ப்ரதிபாதி மே ।
ஸ்புரந்தீ ராவணஸ்யாங்கே வைதேஹீவ தபஸ்விநீ ॥' என்றபடி

உபமாநோபமேயபாவம் இவ்விதம் அமைக்கப்பட்டதுபோலும்.

அன்றியும்

'யத்யத் விபூதிமத் ஸத்த்வம் ஸ்ரீமதூர்ஜிதமேவ வா ।
தத்ததேவாவகச்ச த்வம் மம தேஜோம்ஶஸம்பவம் ॥'

என்று ஸ்ரீகீதாசார்யன் அருளிச்செய்தபடி மேகம் மின்னல் முதலிய விலக்ஷணமான பதார்த்தங்களைக் கண்டவுடன் ஸர்வதத்த்வத்தையறிந்த ஆண்டாளுக்கு இவையெல்லாம் பகவதம்சமானது பற்றியே ஏற்றம் பெற்றனவென்கிற ப்ரத்யபிஜ்ஞாநம் ஜநித்தவுடனே பகவானுடைய திருமேனியின் வைபவத்தை அவர் அநுபவித்தார்போலும். தவிரவும் கோபவ்ருத்தர்கள் இந்த்ரனைப் யஜ்ஞதேவதையாக எண்ணி அவனை ஆராதிக்கத் தொடங்கியதைக் கோவிந்தன் தடைசெய்ததுபோலல்லாமல், நாம் ஸ்ருஷ்டிஸ்திதிலயபதியான பரமாத்மாவையே யஜ்ஞதேவதையாக உபாஸித்திருக்கிறோம் என்பதற்கு ஸூசகமாக அவனது திருமேனியையும் திவ்யாயுதங்களையும் அநுஸந்தித்தார்போலும். இங்கு 'ஊழிமுதல்வன்' என்றதால், ஆண்டாள் தனது திவ்யதேசத்து எம்பெருமானாகிய வடபத்ரசாயியையும் பாழியந்தோள் பற்பநாபன் என்றதால் ஸமீபத்திலுள்ள அநந்தசயந க்ஷேத்ரத்தில் தனது தீர்க்கசதுர்ப்புஜங்களுடன் ஸேவைஸாதிக்கும் அநந்தபத்மநாபனையும் 'தாழாதே சார்ங்கமுதைத்த சரமழைபோல்' என்றதால், திருக்குடந்தையில் தன் திருக்கையில் ஜகத்ரக்ஷணார்த்தம் சார்ங்கத்தை ஏந்தி நிற்கும் ஆராவமுதனையும் ஸாக்ஷாத்கரித்தார் என்பது அநுசிதமாகாது.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑍀𑌸𑌮𑍇𑌤 𑌶𑍍𑌰𑍀𑌦𑍇𑌵𑌾𑌧𑌿𑌰𑌾𑌜𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌶𑍍𑌰𑍀𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌶𑍍𑌰𑍀𑌵𑌣𑍍 𑌶𑌠𑌕𑍋𑌪 𑌶𑍍𑌰𑍀 𑌵𑍀𑌰𑌰𑌾𑌘𑌵 𑌶𑌠𑌕𑍋𑌪 𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰 𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃

ஸ்ரீ பிள்ளைபாக்கம் அழகியசிங்கர் வைபவச் சுருக்கம்

[இளநகர் திருமலை கட்டம் ஸ்ரீ. உப. ஸ்ரீசைலதேசிக தாதாசார்ய ஸ்வாமி இயற்றியது.]

[வேதாந்த சிரோமணி ஸ்ரீ தேசிக தர்சந துரந்தர ஸ்ரீ. உப. தோட்டாலம் வேணுகோபாலாசார்ய ஸ்வாமியால் பரிஷ்கரிக்கப்பட்டது.]

𑌯𑌦𑍀𑌯 𑌚𑌰𑌣𑌦𑍍𑌵𑌯𑌂 𑌨𑌿𑌖𑌿𑌲𑌧𑌾𑌰𑌣𑌂 𑌕𑍋𑌮𑌲𑌂
𑌮𑌦𑍀𑌯𑌕𑌰𑌸𑌂𑌪𑍁𑌟𑍇 𑌪𑍍𑌰𑌸𑌭𑌮𑍇𑌵 𑌬𑌦𑍍𑌧𑌂 𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 ।
𑌮𑌹𑌾𑌨𑍍𑌤𑌃𑌶𑌿𑌰𑌸𑌿 𑌧𑌾𑌰𑌿𑌤𑌂 𑌸𑍍𑌵𑌪𑌿 𑌚 𑌵𑌕𑍍𑌷𑌸𑌾𑌯𑍋𑌜𑌿𑌤𑌂
𑌤𑌮𑌦𑍍𑌯 𑌨𑍃𑌹𑌰𑌿𑌂 𑌭𑌜𑍇 𑌪𑍍𑌰𑌣𑌤𑌕𑌾𑌮𑌧𑌾𑌰𑌾𑌕𑍃𑌤𑌿𑌮𑍍 ॥

𑌶𑍍𑌰𑍀𑌵𑍀𑌰𑌰𑌾𑌘𑌵𑌮𑍁𑌨𑍇𑌸𑍍𑌤𑌨𑌯𑌂 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌿𑌤𑍍𑌤𑌰𑌮𑍍 ।
𑌕𑍌𑌶𑌿𑌕𑌾𑌨𑍍𑌵𑌯𑌸𑌂𑌭𑍂𑌤𑌂 𑌯𑍋𑌗𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌮𑌹𑌂 𑌭𑌜𑍇 ॥
𑌶𑍍𑌰𑍀𑌵𑍀𑌰𑌰𑌾𑌘𑌵𑌶𑍍𑌰𑍀𑌣𑌾𑌂 𑌶𑌠𑌕𑍋𑌪𑌶𑍍𑌰𑌿𑌯𑌾𑌮𑌪𑌿 ।
𑌐𑌕𑍍𑌯𑌂 𑌵𑍍𑌯𑌞𑍍𑌜𑌯𑌿𑌤𑌾𑌰𑌂 𑌤𑌂 𑌮𑌨𑍍𑌯𑍇 𑌤𑌂 𑌮𑌨𑍍𑌦𑌿𑌰𑌾𑌶𑍍𑌰𑌯𑍇 ॥
*𑌶𑍍𑌰𑍀𑌬𑌾𑌲𑌨𑌗𑌰𑌵𑌾𑌸𑍀 𑌸𑍍𑌵𑌸𑍍𑌰𑍀𑌯𑌃 𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌶𑍇𑌷𑌤𑌾𑌮𑌹𑍋𑌦𑌿 ।
𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌮𑌹𑍀𑌤𑌾 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌸𑍍𑌵𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌵𑍈𑌭𑌵𑌂 𑌬𑍍𑌰𑍂𑌤𑍇 ॥
𑌸𑍍𑌵𑌾𑌹𑌂 𑌚𑌿𑌤𑌂𑌪𑌚𑌮𑌤𑌿𑌃 𑌸𑍍𑌵 𑌸𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌿𑌜𑌾𑌮𑍀𑌨𑌂 𑌤𑌦𑍀𑌯𑌚𑌰𑌿𑌤𑌂 𑌵𑌿𑌬𑍁𑌧𑍇𑌯𑍇𑌵𑌿𑌪𑍁𑌲𑌮𑌸𑍍𑌮𑌿 ।
𑌜𑌾𑌨𑌨𑍍𑌨𑌪𑌿 𑌕𑍍𑌷𑌤𑌸𑌲𑌹𑌸𑍍𑌯𑌾𑌮𑌿𑌯𑌤𑍍𑌤𑍍𑌵𑌾 𑌚𑌾𑌣𑌲 𑌦𑍍𑌯𑌸𑍀𑌤𑌤𑍍𑌪𑌵 𑌮𑌂𑌕𑍍𑌷𑍁 𑌨𑌿𑌯𑍋𑌜𑌿𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 ॥

க்ரந்த ப்ரதிஜ்ஞை

ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஸந்நிதி குருபரம்பரையில் 37-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரோபய வேதாந்தாசார்ய ஸ்ரீ பகவத் ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌம ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ வீரராகவ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் என்கிற ஸ்ரீ பிள்ளைபாக்கம் அழகியசிங்கருடைய வைபவத்தைச் சுருக்கமாக ப்ரகாசப்படுத்தவேண்டு மென்கிற சில மஹான்

---

* 𑌬𑌾𑌲𑌨𑌗𑌰𑌂—இளநகர் என்கிற ப்ரஸித்தமான அக்ரஹாரம் ஸ்ரீகாஞ்சீபுரத்திற்கு ஸமீபத்திலுள்ளது.

களின் நியமநத்தைச் சிரஸ்ஸால் வஹித்துத் தங்யனுய், ஸ்ரீஸ்வாமி அருளிச் செய்த ஸ்ரீஸூக்திகளைக் கொண்டே ஸ்வாமியின் அவதாரம் தொடங்கி அவதார ஸமாப்தி பர்யந்தமான சரித்ரங்களை அங்யதோக்தி அதிசயோக்திகள் இல்லாமல் ப்ராசீந குருபரம்பரா ப்ரபாவம் போல் அவருடைய மாஹாத்ம்யாவிஷ்கரணார்த்தமாக அவருடைய க்ரந்த நாமங்களையும் அவற்றின் நிர்மாண காலங்களையும் அவற்றின் காரணங்களையும் யதாமதி யதாஸ்ருதி யதோபலப்தி ஸங்க்ரஹமாக விவரிக்கின்றேன்.

ஸ்ரீ ஸ்வாமியின் அவதார காலம் தேசம் முதலியன

இந்த ஸ்வாமி கலியுகம் - 4945-க்கு மேல் (1845) க்ரோதிஞு மாசிமீ சுக்ல பக்ஷம் த்வாதசியுடன் கூடிய புஷ்ய நக்ஷத்ரத்தில் நம் ஸ்ரீபாஷ்யகாரருடைய அவதார ஸ்தலமான ஸ்ரீபெரும்பூதூர் என்கிற திவ்ய க்ஷேத்ரத்திற்கு இரண்டு மைல் தென்கிழக்கிலுள்ள பிள்ளைபாக்கம் என்கிற அக்ரஹாரத்தில், ஸ்ரீ கௌஶிக கோத்ரத்தில் கோமாண்டூர் இளையவில்லி வம்சத்தில் உதித்து, வேத வேதாந்த விசக்ஷணராயும் ஸத்கர்மாநுஷ்டாதாவாயும் எழுந்தருளியிருந்த ஸ்ரீவீரராகவாசார்யர் என்கிற ஸ்வாமியின் தர்மபத்நியாயும், இளநகர் திருமலை கட்டம் ஸ்ரீநிவாஸ தாதாசார்யர் என்கிற ஷோடசவர்ண ஸ்வர்ண ஸமாந பரமைகாந்தி ஸார்வபௌமருடைய குமாரத்தியுமான கநகவல்லி என்கிற பெண்மணியிடத்தில் ஆவிர்ப்பவித்தருளி, ஸ்ரீகோபாலாசார்யர் என்கிற திருநாமத்துடன் விளங்கிவந்தார். இந்த ஸ்வாமிக்கு ஜ்யேஷ்ட கநிஷ்ட ஸஹோதரர்கள் இருவரும், ஜ்யேஷ்ட கநிஷ்ட ஸஹோதரிகள் ஐவருமுண்டு. இவர் பிதாவால் கர்ப்பாஷ்டமத்தில் (எழாவது வயதில்) உபநீதராய், ஶௌசாசாரங்களில் நன்கு விநீதராய்ப் பிதாவிடத்திலேயே க்ரமாந்தம் வேதாத்யயநம் செய்துகொண்டு ஸாஹித்யமும் க்ரஹித்தருளினர். ப்ரதிதிநமும் ப்ராத: காலத்தில் திருத்தகப்பனருடன் வேப்பங்காணி என்கிற குளத்தில் நீராடி நித்யகர்மாநுஷ்டாநங்களை முடித்துக்கொண்டு ப்ரஹ்மயஜ்ஞ ப்ரஶ்நம் சொல்லிக்கொண்டு எழுந்தருளுங் காலத்தில் கடாக்ஷிக்கும் அக்காலத்திய பெரியோர்கள், 'த்ரிவிக்ரம வாமநாவதாரங்களை ஏககாலத்தில் ஸேவிக்கப் பெற்றோம்' என்று ஸந்தோஷிப்பார்கள் என்று சொல்லக் கேள்வியுண்டு.

பஞ்ச ஸம்ஸ்காரமும் க்ரஹஸ்த தர்மாநுஷ்டாநமும்

இப்படி த்விஜந்மாவானபின், ஸ்ரீ ஸ்வாமி த்ருதீயமான ஸ்ரீ வைஷ்ண ஜந்மத்தைப் பெறுவதற்காக ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸந்நிதியில் 33-வதுபட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் ஜகத்விக்யாதமாய் ஸம்ப்ரதாய ப்ரவசநம் செய்துவந்த ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருவடிகளை ஆஶ்ரயித்துப் பஞ்சஸம்ஸ்காரங்களைப் பெற்றுக்கொண்டு திரும்பவும் க்ராமத்திலே அத்யயந நிரதராகவே எழுந்தருளியிருந்தார். அத்யயநம் முடிந்தவாறே "க்ஷீத்வா ஸ்நாயாத்" என்ற

விதிப்படி ஸமாவர்த்தந காலம் ப்ரஸக்தமாகவே, "தஸ்யஶீலவயோ வ்ருத்தாம் தஸ்யாபிஜநலக்ஷணாம்" என்றபடி துல்யாபிஜநையான கோமலாம்பா என்கிற கந்யாரத்நத்தைப் பாணிக்ரஹணம் செய்து கொண்டு க்ரஹஸ்தாஶ்ரமத்தில் நிரந்தரமாக ஔபாஸநாக்நி ஶுஶ்ரூஷாதிகளுடன் பெருமாள்கோயிலில் எழுந்தருளியிருந்தார்.

ஸாமாந்ய சாஸ்த்ராத்யயநமும் அதில் மேன்மையும்

இப்படிப் பெருமாள் கோவிலில் வஸித்துக்கொண்டு, திருப்புட்குழி ஸ்வாமி என்று ப்ரஸித்தராய், மஹாமஹோபாத்யாய பிருதாங்கிதராய், ஸாமாந்ய விசேஷ சாஸ்த்ரங்களில் அநேக க்ரந்த நிர்மாதாவாய், ஸர்வ சாஸ்த்ரங்களிலும் ப்ரவசநம் செய்துகொண்டு எழுந்தருளியிருந்த ஸ்ரீ க்ருஷ்ண தாதாசார்யர் என்கிற ஸ்வாமியிடத்தில் மஹாபாஷ்யாந்தம் வ்யாகரண சாஸ்த்ரமும் அப்படியே ந்யாய சாஸ்த்ரமும் அப்யஸித்து வந்தார். அந்த ஸமயத்தில் "ஸத்யேவ ஸௌம்யேதமக்ர ஆஸீத்" என்கிற ஸத்வித்யா வாக்யத்தில் 'ஏவ' சப்தார்த்தத்தில் விசாரம் செய்ய வேண்டுமென்று ஓர் அத்வைத வேதாந்தி வர, ஸ்ரீ திருப்புட்குழி ஸ்வாமியும், அது வ்யாகரண சாஸ்த்ர விசாரமாயிருந்தபடியால் நம் ஸ்ரீ ஸ்வாமியைக்கொண்டு அவருக்கு ஸமாதாநம் சொல்லும்படி நியமித்தருளினார். அப்போது ஸ்ரீ ஸ்வாமியும் அவருக்குத் தகுந்த ஸமாதாநங்கள் சொல்ல, அவரும் த்ருப்தராய்ச் சென்றார். அந்த ஸமாதாநத்தை அப்படியே 'ஏவகாரமணி' என்றும் 'ஏவகாரஸங்க்ரஹ:' என்றும் இரு க்ரந்தங்களாகச் செய்து ஸ்ரீ திருப்புட்குழி ஸ்வாமியிடம் காட்ட, அந்த ஸ்வாமியும் கடாக்ஷித்துப் போர உகந்து, 'ஶிஷ்யாதிச்சேத் பராஜயம்' இங்கே ஒக்குமென்று திருவாய்மலர்ந்தருளினாரென்று முன்னோர் சொல்லிக் கேட்டதுண்டு. இப்படி ஸாமாந்ய சாஸ்த்ராத்யயநம் முடிந்ததும் சிலகாலம் க்ராமத்தில் எழுந்தருளியிருந்து, தம் திருத்தம்பியார் முதலியவர்கட்கு வ்யாகரண சாஸ்த்ர ப்ரவசநம் செய்து கொண்டு எழுந்தருளியிருந்தார்.

வேதாந்த சாஸ்த்ராத்யயநம்

பிறகு "தத்ஜ்ஞாநம் அஜ்ஞாநமதோऽந்யதுக்தம்" என்றிருப்பதைக் கண்டு ஸர்வ சாஸ்த்ரங்களுக்கும் அங்கியாய் ப்ரதாநமுமான அத்யாத்ம (வேதாந்த) சாஸ்த்ர க்ரஹணம் செய்யத் திருவுள்ளங்கொண்டு திருவெவ்வுளூருக்கு எழுந்தருளி, தமக்கு ஸமாஶ்ரயணாசார்யனை ஸ்ரீ சடகோப மஹாதேசிகனிடத்தில் ஸ்ரீ பாஷ்யம் காலக்ஷேபம் தொடங்கி க்ரஹித்துக்கொண்டு எழுந்தருளியிருந்தார். அப்போது அந்த ஸ்ரீ சடகோப மஹாதேசிகனும் சிஷ்யாநுக்ரஹத்தின் காரணமாய் ஸஞ்சாரம் எழுந்தருளிவிடவே, நம் ஸ்ரீ ஸ்வாமிக்குத் தமக்குக் கூட எழுந்தருள ஶக்தியில்லாமல் நின்றுவிடவே, ஸ்ரீ பாஷ்ய க்ரஹணமும் குறையாகவே நின்றுவிட்டது. சில காலம் கழித்து ஸ்ரீ சடகோப மஹாதேசிகனும்

ப்ரமாதி வருஷத்தில் திருநாட்டை யலங்கரிக்கவே, அதன் மறு திநத்தில் 34-வது பட்டத்தில் ஸ்ரீ அத்திப்பட்டு அழகிய சிங்கர் என்கிற ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேவக ஸ்ரீ வண் சடகோப ஸ்ரீ சடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹாதேசிகன் அவதரித்தருளினர். அந்த மஹா தேசிகனிடத்தில் நம் ஸ்வாமி பூர்வம் விச்சிந்நமான ஸ்ரீ பாஷ்யத்தையும் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் முதலிய க்ரந்தங்களையும் பூர்ணமாக அதிகரித்தார்.

ஸ்ரீ கார்ய கைங்கர்ய நிர்வாஹம்

அந்த ஸமயம் ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கர் நம் ஸ்வாமியை ஸ்ரீ கார்ய கைங்கர்யத்தை நிர்வஹிக்கும்படி நியமிக்க, ஸ்ரீ ஸ்வாமியும் பரதாழ்வானைப்போல அத்யந்த பாரதந்த்ர்ய காஷ்டையை வஹித்து, அந்த நியமநத்தை ஸிரஸ்ஸால் வஹித்து, அந்தக் கைங்கர்யத்தில் துரந்தரராக எழுந்தருளியிருந்தார். பிறகு கொஞ்ச காலம் கழித்து, ஸ்ரீ வீரராகவனுக்குத் தங்கத் திருப்பல்லக்கு செய்யும்படி ஸ்ரீ அழகிய சிங்கர் நியமிக்க, நம் ஸ்ரீ ஸ்வாமியும் அக்கைங்கர்யத்தைப் பூர்த்தி செய்து வைத்து, ஸ்ரீ அழகிய சிங்கரின் திருவுள்ள முகக்கும்படி அந்தத் திருப்பல்லக்கில் பெருமாள் எழுந்தருளும்போது அஞ்ஜலி ஹஸ்தராய் ஸேவித்துக்கொண்டிருக்கும்படி திருப்பல்லக்கின் உட்புறம் பெருமாளுக்கு எதிர்ப்பக்கத்தில் ஸ்ரீ அழகியசிங்கருடைய பிம்பத்தையும் எழுந்தருளப் பண்ணவே, அதைக் கடாக்ஷித்து ஸ்ரீ அழகிய சிங்கரும் விசேஷ ப்ரீதராய் 'ஹாவஜெகூந' என்று ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் இளைய பெருமாளைக் கொண்டாடினைப்போல் மிகவும் கொண்டாடியருளினர். இந்த விஷயத்தை, அந்த அழகிய சிங்கர் விஷயமாக நம் ஸ்வாமி அருளிச்செய்த 'ஆசார்ய ஸப்ததி' என்கிற க்ரந்தத்தில் 'யெ௵நவாஸஎ யதீநூ:'' என்கிற பத்தாவது ஸ்லோகத்தில் காணலாம்.

ந்யாஸ வித்யாநுஷ்டாநம்

பிறகு ஸ்ரீஸ்வாமி ஆசார்யாநுக்ருஹீதமான ஸ்ரீ கார்ய கைங்கர்யத்தில் துரந்தரராக இருக்கும்போதே, விஷுவூமாக மாஸம் புஷ்ய நக்ஷத்ரமான ஸ்வாவதார திநத்தில் தமக்கு ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் திருவடிகளில் மோக்ஷார்த்தமாக ந்யாஸ வித்யாநுஷ்டாநத்தை ப்ரார்த்திக்க, ஸ்ரீ அத்திப்பட்டு அழகிய சிங்கரும் அப்படியே நடத்தி வைப்பதாகத் திருவுள்ளம் பற்றிய பின்பு, பெருமாளுக்கு விசேஷாராதநார்த்தமாகத் தளிகை முதலானவைகளை ஸமர்ப்பித்தும் வித்யாநுஷ்டாந காலத்தை ப்ரதீக்ஷித்துக்கொண்டு மிருக்கும் ஸமயத்தில், ஸ்ரீ அழகிய சிங்கர் இந்த ஸ்வாமியின் பொறுமையை எல்லோருக்கும் ப்ரகாசப்படுத்தத் திருவுள்ளம் பற்றி நம் ஸ்வாமியைக் கூப்பிட்டு, "இன்று பெருமாள் நியமநமாகவில்லை; இன்னொரு ஸமயம் ஆகட்டும்'' என்று நியமிக்கவே, நம் ஸ்வாமியும் அப்போது முகத்தில் வைவர்ண்யம் முதலியன ஒன்று

மில்லாமல் ஸ்மிதபூர்வமாகவே 'தந்யோஸ்மி' என்று அந்த நியமநத்தையும் சிரஸா வஹித்து எழுந்தருளியிருந்தார்.

அநந்தரம் சித்ரபாநு வருஷம் ஆவணி மாஸத்தில் ஒருநாள் ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஸ்வாமியின் ஸ்வப்நத்தில் தம் ஆசார்யனை ஸ்ரீ அத்திப்பட்டு அழகிய சிங்கரின் திருவடிவத்துடன் பெருமாளுக்கு மங்களாரத்தி செய்த பிறகு மணையில் எழுந்தருளியிருந்து தாம் வைகுண்டம் போவதாக நியமித்தவுடன், நம் ஸ்வாமி மிக்க பரபரப்புடன் 'அடியேன் செய்ய அடுப்பது என்?' என்று மிகவும் சோகார்த்தராய் ப்ரஶ்நம் செய்யுங் காலத்தில், 'நாம் உமக்கு இப்போதே ந்யாஸவித்யாநுஷ்டாநம் செய்து வைக்கிறோம்; ஹருத்தாப நாசிநியில் ஸ்நாநம் செய்து யஜ்ஞோபவீத தாரணம் பண்ணிக்கொண்டு வாரும்' என்று நியமிக்கவே, நம் ஸ்வாமியும் அதிஸந்துஷ்டராய் ஹ்ருத்தாப நாசிநியில் ஸ்நாநம் செய்யும்போது விழித்துக்கொண்டு, இவ்வளவும் ஸ்வப்ந வ்ருத்தாந்தமெனக் கண்டு, ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனே தாம் விஷு வர்ஷத்தில் ஆசார்ய ஸகாஶத்தில் ப்ரார்த்தித்த விஷயத்தை ஞாபகப்படுத்துவதாக நிச்சயித்து, பொழுது விடிந்ததும் ஸ்ரீ அழகிய சிங்கர் ஸந்நிதியில் இந்த ஸ்வப்ந வ்ருத்தாந்தத்தை விஜ்ஞாபித்தபோதே ஸ்ரீ அழகிய சிங்கர் போர உகந்தருளி, அன்றே ரேவதீ நக்ஷத்ரமாகையால், ஸங்கல்ப புரஸ்ஸரமாக ந்யாஸவித்யோக்தி நிஷ்டையை அநுஷ்டிப்பித்தருளினர். ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனும் 'எங்குமுளன் கண்ணன்' என்றும் 'ஸத்யம் விதாதும் நிஜப்ருத்யபாஷிதம்' என்றும் சொல்லுகிறபடியே பக்தனை பாலனின் பாஷிதங்களை ஸ்தம்பாவதாரத்தினல் ஸத்யமாக்கியதுபோல் "ஸாக்ஷாந்நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்யமயீம் தநும்" என்கிற ப்ராசீந ருஷி வாக்யங்களையும் ஸத்யமாக்குவதற்காகவே ப்ரஹ்லாதாழ்வானைப் போலவே பக்தரான நம் ஸ்வாமிக்கும் ஸ்வப்நத்தில் ஆசார்ய வேஷம் பூண்டு ஸேவை ஸாதித்தருளினன் என்பதில் ஸந்தேஹ லேசமுமில்லை. இந்த ஐதிஹ்யங்களை ஆசார்ய ஸப்ததி க்ரந்தத்தில் 17 முதல் 22 வரையுள்ள ஶ்லோகங்களால் நம் ஸ்வாமி தாமே விவரித்தருளினர். இப்படி நம் ஸ்ரீ ஸ்வாமிக்கு நேர்ந்த சில பகவத் கடாக்ஷ விசேஷங்களை நிதாநமாகக்கொண்டு ஸ்ரீ அழகிய சிங்கரும் அநேக தடவைகளில் கோஷ்டியில் நம் ஸ்வாமியை நிர்த்தேசித்து, "இந்த வ்யக்தியிடத்தில் ஓர் விசேஷமுண்டு" என்று அருளிச் செய்வதுண்டு. இதைக் கணிசித்தே நம் ஸ்ரீ ஸ்வாமியும் "[illegible] விஶேஷ:" என்ற உத்தராஶ்ரம தனியனிலும் "[illegible]" என்ற பூர்வாஶ்ரம தனியனிலும் இந்த விசேஷத்தை அநுஸந்திக்கும்படி தம் சிஷ்யர்களுக்கு நியமித்தருளினர்.

ஸ்ரீ கார்யகைங்கர்யமும் ஸ்ரீ வீரராகவனுடைய கடாக்ஷவிசேஷமும்

இப்படி ஸ்ரீ ஸ்வாமி பகவத்கடாக்ஷ மூலமாகக் கிடைத்த ஆசார்ய கடாக்ஷம்பெற்று முக்த கைங்கர்ய துல்யமான நிருபாதிக கைங்கர்யம்

செய்துகொண்டு எழுந்தருளியிருக்கும்போது, ஸ்ரீ அத்திப்பட்டு அழகிய சிங்கரும் அந்த சித்ரபாநு வருஷம் புரட்டாசி மாஸத்திலேயே தன்னடிச் சோதிக்கு எழுந்தருளவே, ஸ்ரீ ந்ருஸிம்ஹாஸ்தாந நிர்வாஹம், ஸமீபத்திலிருந்த களத்தூர் வங்கீபுரம் ஸ்ரீ நரஸிம்ஹ ராகவாசார்யர் என்கிற ஸ்வாமிக்கு ப்ராப்தமாகி, அந்த ஸ்வாமியும் ஸந்யாஸம் செய்துகொண்டு அத்யுதார ஸ்வபாவ முடையவராகையால் ஸ்ரீ அத்திப்பட்டு அழகிய சிங்கருடைய சரம கைங்கர்யங்களை அதற்கு அநுகுணமாக நடத்திக் கொண்டு ஆஸ்தாந நிர்வாஹம் செய்துவரும்போது ஸ்ரீ கார்ய கைங்கர்யத்தில் நம் ஸ்வாமியையே நியமித்திருந்தபடியால், ஸ்ரீ ஸ்வாமியும் ஸ்ரீ அழகிய சிங்கருடன் கூடவேயிருக்கும்படி நேர்ந்தது. அந்தக் காலத்தில் ஸ்ரீ வீரராகவனுடைய த்ருவபேரத்தில் ப்ரஸாரித தக்ஷிண ஹஸ்தத்தில் கொஞ்சம் ஶைதில்யம் ஏற்பட்டு, அதை ஸ்ரீ அழகியசிங்கரும் கவனியாமலிருந்த காலத்தில், நம் ஸ்ரீ ஸ்வாமிக்கு ஒருநாள் ஸ்வப்நத்தில், பெருமாள் கையை ஊன்றி எழுந்திருக்க முயற்சித்தும் முடியாதபடியால் பெருமூச்சு விட்டுக்கொண்டு நம் ஸ்வாமியைக் கடாக்ஷித்து “நாம் இப்படி நோயால் வருந்தலாமா? நல்ல வைத்யனைக்கொண்டு ஸ்வஸ்தப் படுத்தலாகாதா?” என்று உத்கோஷித்ததாயும், அவ்வுத்கோஷத்தைக் கேட்டுத் தாமும் அவ்விதமே ஸ்ரீ அழகியசிங்கர் ஸந்நிதியில் உத்கோஷித்ததாயும் கண்டு, உடனே ஸந்நிதியில் விஜ்ஞாபநம் செய்யவே, தத்க்ஷணமே தக்க ஸ்தபதிகளை வரவழைத்து ஸமீகரணம் செய்து ஸம்ப்ரோக்ஷணமும் அத்யுதார ரீதியில் நடத்திவைத்தாயிற்று. இந்த ஸ்வப்ந வ்ருத்தாந்தத்தை நம் ஸ்வாமி தம்முடைய பட்டாபிஷேக ஸ்ரீ முகத்தில் * 15, 16, 17 என்ற மூன்று ஸ்லோகங்களால் விவரித்தருளியிருக்கிறார்.

15. [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

16. [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

17. [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

[தொடரும்]

ஸ்ரீ:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[3-ம் அங்கம்]

[ஸ்ரீ உப. அன்பில் வி. கோபாலாசார்ய ஸ்வாமி,
அட்வோகேட், திரிசிராப்பள்ளி]

[ஸம்புடம் 2, ஸஞ்சிகை 5, பக்கம் 175-ன் தொடர்ச்சி]

ராகம் என்பது ஆசை. ஆசையைத் தடுப்பவன்பேரில் த்வேஷம் வரலாம். பிறவி த்வேஷமும் இருக்கலாம். காமம் என்பது பெண்ணாசை; அதைத் தடுப்பவர்பேரில் க்ரோதம் வரும். காமம் ராக விசேஷம்.. காமனையும் க்ரோதனையும் கீதையில் ஒன்ருகச் சேர்த்து 'காம ஏஷ க்ரோத ஏஷ:' என்று (3, 37-ல்) பகவான் பாடியது. காம க்ரோதர்களை மேல் அங்கத்தில் ப்ரவேசிப்பிக்கிருர்.

ராகன் :—'தோழா! உன் ஸஹாயத்தோடு கூடிய எனக்கு நம் ஸ்வாமியின் கார்யம் அநேகமாக ஸித்தமென்றே நிச்சயிக்கிறேன்.'

த்வேஷன் :—'உன் விரோதிகளை த்வேஷித்துத் தொலைக்கிறேன். நாம் இருவரும் ஒரேவிதமாக விவேகரைத் தகைவதால் நாம் ஸகாக்கள்.'

ராகன் :—மோஹராஜ ருத்ர! ஒன்றைத் தெரிவிக்கிறேன்.

" विवेककुहनाबलाद्यतिहतेषु बाह्येष्वसौ
त्रिवर्गपदवी परं शरणमद्य मोहश्रियः।
विरक्तिमिह तापसीं व्यपनयामि दूरादहं
विमथ्य विनिवर्त्यतां सपदि विष्णुभक्तिस्त्वया ॥"

'விவேகன் மாயையின் சூழ்ச்சியால் புறச்சமயங்கள் தொலைந்தன. இப்பொழுது த்ரிவர்க்க விஷயமான வேதமார்க்க மொன்றுதான் மோக்ஷ வழியிற்செல்லாமல் மோஹ வசமாக ஜீவன் இருக்கும்படி செய்ய நமக்கு சக்தியாக உள்ளது. த்ரிவர்க்க வேதமார்க்கம் தவிர மோஹர் ஐஸ்வர்யத்திற்கு வேறு சரணில்லை. விரக்தி என்னும் பேதையை (தபஸ்விநியை) நான் தூரத் துரத்திவிடுகிறேன்; அவளுடைய ஸகியான விஷ்ணு பக்தியை நீ விரட்டிவிடவேணும்.'

விவேகர் புறச்சமயங்களை நிரஸநம் செய்தது மோசம் கபடம் என்று ராகனுக்குத் தோன்றுகிறது. விவேகன் குஹநா பலத்தால் ஜயித்தான் என்கிருன். 'மோஹஸ்ரீ' - மோஹராஜ்ய லக்ஷ்மீ. வேதங்கள் முக்குண விஷயங்கள். வேதவாத ரதர்களான அபண்டிதர்கள், ஸ்வர்க்கமே உயர்ந்ததென்று ஸ்வர்க்கபரராய் அதனிலும் மேல் புருஷார்த்தமான மோக்ஷ மென்னும் மற்றென்று கிடையவே கிடையாது என்பர்,

அவர்கள் காமாத்மாக்கள். காமகாமர்களுக்கு கதாகதமேதான் என்று பகவான் ஸ்வர்க்கமாத்ர பரமாகவும், மோக்ஷத்தில் தாத்பர்ய மில்லாததாகவும், வேதங்களுக்குப் பொருளுரைக்கும் மீமாம்ஸகாபாஸர் களைக் கீதை ஆரம்பத்திலேயே நிந்தித்தது. ஞானம்தான் அயநத்திற்கு மார்க்கம்; வேறு வழியே இல்லை. 'நாந்ய: பந்தா:' என்ற வேதாந்த வாதத்திற்கு நேர் விரோதமாக, 'நாந்யதஸ்தி' என்று வேத வாதமாக வாதிக்கிறார்கள். கர்மம் ஞானத்திற்கு அங்கமென்று வேதாந்திகள் வாதத்திற்கு நேர் தலைகீழாக 'ஞானம் கர்மத்திற்கு அங்கம்' என்கிறார் கள். இங்கே புருஷார்த்தாதிகரணத்தை நினைக்கிறார். 'ஸ்வர்க காமோ யஜேத', 'ஜ்யோதிஷ்டோமேன ஸ்வர்க காமோ யஜேத' ஓர் க்ரியையில் இறங்கு வதற்கு அதன் பலத்தில் காமம்தான் அதிகாரம் தரும்; காம மில்லையேல் அதிகாரமில்லை யென்பர். நிஷ்காம கர்ம மென்பதை அவர்கள் ஒப்பார். எல்லாம் ப்ரவ்ருத்தி கர்மமே; நிவ்ருத்தி கர்மமே கிடையாது. வேதாந்த மார்க்கத்தில் எல்லாம் நிவ்ருத்தியே. ராகன், 'விரக்தியை நான் தொலைக் கிறேன்; விஷ்ணு பக்தியை விஷ்ணு த்வேஷத்தைப் பெருக்கி நீ தொலை' என்கிறான். சிசுபாலன் விஷ்ணு த்வேஷி; ஹிரண்யனும் அப்படியே. சிசுபாலன் ஜந்ம த்வேஷி. ஹிரண்யன் தன் தம்பியைக் கொன்றதாலும், தனக்கு மேற்பட்டவரென்று உலகம் ஆஶ்ரயிக்கும் ஜகதீஸ்வரரென்றும் அவரை த்வேஷித்தான். பக்தி யென்பது ப்ரீதி; த்வேஷமதற்கு விரோதி.

ராகன் :—ஸ்வர்க்கத்தின் குணங்களையும் மோக்ஷத்தின் தோஷங் களையும் எங்கும், ப்ரகடநம் செய்துகொண்டே யிருக்கவேணும். நான் மாயா ஸஹஸ்ர மறிந்தவன். மாரீச மைதிலீ ந்யாயத்தை அநுஸரித்து நான் விரக்தியை வஞ்சிக்கிறேன்; நீ பௌலஸ்த்ய ராவண மார்க் கத்தை அநுஸரித்து விஷ்ணு பக்தியை அகற்றிவிடு. 'தேந மாயா ஸஹஸ்ரம் தத் ஶம்பரஸ்ய' என்று பராசரர். மயன், சம்பரன், மாரீசன் என்று மாயாவிகளின் கணநம். ராவணன் கடல் சூழ்ந்த இலங்கையில் ஸீதையைச் சிறையிட்டது போல, ஜீவனைப் பத்து இந்த் ரியத் தலைகளையுடைய மனமென்று ராவணன் பவக்கடல் சூழ்ந்த தேஹ மென்னும் வன்சிறையில் வைத்து, பதியைப் பிரிந்த ஜீவன் கதறுகிறான் என்று முதல் அங்கத்தில் ஸாதித்தபடி இங்கும் ஸாதிக்கிறார். மன மெனும் பத்துத்தலை ராவணன் ஆட்டிவைக்கும் அத்யாத்ம நாடகத்தை ராகாதிகள் ஆடுகிறார்கள்.

ராகன் :—ராவணன் பௌலஸ்த்யன். ஸாக்ஷாத் ப்ரஹ்மாவின் குலம். வேதங்களில் நிபுணன். 'ருஷிர்ஹோதா ப்ரஹ்மணோ ப்ரஹ்மா'. அவன் காமாத்மா. அஸுர குரு சுக்ரர். அவர் ந்யாயக்கண் தவிரவே தவிராதென்பர். 'கவீநாமுஶநா கவி:' என்று கீதையில் அவர் ஓர் விபூதியாகப் புகழப்பட்டிருக்கிறார். அஸுர குருக்களான சுக்ரர் முதலிய வர்களே நிரீஸ்வர மீமாம்ஸகராகப் பிறந்து மீமாம்ஸையை நிரீஸ்வரமாக

மாற்றிவிட்டார்கள். அவர்கள் கபந்த மீமாம்ஸகர்கள். வேதாந்த மீமாம்ஸையின் ஆரம்பத்திலேயே அவர்கள் யுக்திகளை முதல் அதிகரணத்திலும் ஸமந்வயாதிகரணத்திலும் தள்ளியிருந்தாலும், நாம் திரும்பவும் அதையே பலப்படுத்திக் கக்ஷிபேசி, 'ஸ்வர்க்கமே சிறந்தது, மோக்ஷமென்பதே பொருந்தாது' என்று வேதங்களுக்குப் பொருளுரைப்போம். எப்படியும் மோஹச் சுழலிலேயே எல்லோரும் சிக்கி யிருக்கவேணும். அதிலிருந்து விடுதலைக்கு இடம் தரலாகாது.

த்வேஷன் :—நிரீஸ்வர மீமாம்ஸகராகிய நம் ஸுஹ்ருத்துக்கள் நாஸ்திக்யத்தை வ்ருத்தி செய்பவர்; மோக்ஷத்தில் ஆசையையும் நம்பிக்கையையும் அழிப்பவர். நம் மோஹ ராஜர் ஸேனைக்கு நிரீஸ்வர மீமாம்ஸை விஜயத்வஜம்; பதாகை.

ராகன்: —"अल्पमस्थिरमानन्दमिच्छतो यदि रागिता।
अनन्तास्थिरकामस्य विरक्तिः कस्य कीदृशी॥
स्वस्यैवाप्तिः सुखमिति मृषा खेतरस्यानुभूतौ
कामादन्यः क इह घटते मोक्षनामा पुमर्थः।
तस्मादस्मद्बहुमतनिरध्यक्षमीमांसकोक्त्या
स्वेच्छानृत्यद्बहुगुणनिधिः स्वर्ग एवापवर्गः॥

ஸ்ரீ பாஷ்யாரம்பத்தில் 'கர்மபலம் அல்பாஸ்திரம்; அம்ருதத்வமெனும் மோக்ஷம் அநந்த ஸ்திர பலம். அநந்த ஸ்திர பல காமன் முமுக்ஷு; கர்மங்கள் அல்பாஸ்திர பலங்களென்று நிச்சயித்தவன்' என்று மோக்ஷாதிகாரம் விவரிக்கப்பட்டது. அதெப்படி கூடுமென்று அதே சப்தங்களை ப்ரயோகித்து ராகன் ஆக்ஷேபம். ராகத்தை ஒழித்தவ னல்லவோ மோக்ஷாதிகாரி என்கிறார்கள். அல்பாஸ்திரமான ஸுகங்களில் ஆசை ராகமெனும் தோஷமானால், மோக்ஷமெனும் அநந்த ஸ்திரபலத்தில் ஆசை பேராசை யாகாதோ? அவன் எப்படி விராகன் ஆவான்? விராக மில்லாமல் மோக்ஷாதிகாரமே யில்லையே. 'ஸ்வஸ்யைவாப்தி: புமர்த்த:' என்கிறார்கள். 'ஸம்பத்யாவிர்பாவ: ஸ்வேந ஶப்தாத்', 'ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே'. தன் ரூபமேதான் வருகிறதாம். புதிதாக ஒன்றும் வருவதில்லையாம். பழைய சொக்கனே சொக்கன். தன்னிலும் வேறான ஒன்றை அணைந்து அநுபவித்தால் தானே ஸுகம் வரும். தன்னையே தான் கட்டியணைத்து இன்புற முடியுமோ? தன்னிலும் வேறான ஓர் பொருளை விரும்பி அநுபவிப்பதென்றால் அது காமம் தானேயாகும். அப்பொழுது காமம் தானே புருஷார்த்தமாகும். நாங்கள் மோஹ ப்ருத்யர்கள்; நிரீஸ்வர மீமாம்ஸக குருக்களைப் பஹுமானிப்பவர். யதேஷ்டமாக அரும்பெரும் குணங்கள் நர்த்தநம் செய்யும் ஸுகாநுபவ குணங்களையுடைய ஸ்வர்க்கமே தான் அம்ருதத்வமெனும் மோக்ஷம். 'ஸ்வஸித்தஸாம்ராஜ்யம் ஸ்வாநந்த்யதக்ஷம் ஹி

ஹரஷ்ஸ்தெ. நம்மவர் பாஷ்யம் இதுவே. மற்ற பாஷ்யங்களை ஒப் போம்.

த்வேஷன் :—மீமாம்ஸையின் கரையைக் கண்டவரின் ஸம்ப்ர தாயத் தீர்மானமே ஸத்யம். மோக்ஷ வாதம் ம்ருஷா வாதமே. இந்த வேதாந்திகளுக்கு ப்ராப்யமென்றது சிதசித் விசிஷ்டமான ப்ரஹ் மம்தானே? விஸ்வம் முழுதும் அதன் சரீரமாம். ஒரு தேஹம் இருப் பவனே அநந்த துக்க மடைகிறான். அவர்கள் ப்ரபுவுக்கு விஸ்வமே தேஹமானால் எல்லோர் துக்கமும் அவரதே யாகுமன்றோ? அதை அவர் எப்படித் தப்புவது? விசிஷ்ட ப்ரஹ்மம் ப்ராப்யமென்று சொல்லாமல் ஏகமேவாத்விதீயமான விசேஷ சூன்ய ப்ரஹ்ம ஸ்வரூபம் மட்டும் ப்ராப்ய மென்றால், குண சூன்யமான பொருள் எப்படிப் போக்யமாகும்? குணம் நிறைந்த பொருளல்லவோ போக்யமாகும்? கல்யாணகுண பூர்ண மென்னும் வேதாந்திகள் ப்ரஹ்மத்திற்கு எல்லாம் சரீர மென்கிறார்கள். அத்வைதமும் ஸாரமில்லை. வேத சிரஸ்ஸுக்களான வேதாந்தங்கள் பொருளுண்மை யில்லாத வெறும் சப்தமே; ப்ரயோஜந சூன்யமே. 'நிமஷமாத்ரசேஷம்' என்று சேஷசப்த த்வநியால் 'ஶெஷகூவாக வாராஷாயபூவாஃ' என்னும் ஸூத்ரத்தை ஸூசிக்கிறார். 'வெஷொஷரா வெஷாஷா:' என்பர். வேதாந்தங்கள் வேதங்களில் பயனற்ற உவர் பூமி; அஸாரம். ஸ்வர்க்க சாஸ்த்ரமே ஸாரதமம். 'ஹஜெஸஸாரதமம் ஶாஸ்த்ரு'.

ராகன் :—தோழா! உன் பாஷணமே அழகு. ஸாது பாஷிதம். (ஸ்ரீ பாஷ்யகாரர் முதலியவர் பாஷிதம் அஸாது பாஷித மென்று வ்யஞ் ஜநம்.) உன் பாஷிதங்களால், காட்டுத் தீயா லெரியும் வ்ருக்ஷ சிகரத்தின் உச்சியில் கூட்டில் அடைந்த பக்ஷிகளைப்போல விஷ்ணு பக்தி பறந்து போவாள். வேத வ்ருக்ஷத்தின் உச்சி சாகைகள் உபநிஷத்துக்கள். விஷ்ணு பக்தி என்பது விஷ்ணு விஷயமான பக்தி வித்யைகள். அவை வேத சிரஸ்ஸுக்களில் உள்ளன. உபநிஷத்துக்களே கருத்தில்லாத வெறும் அர்த்தவாதப் பேச்சாய்விட்டால், பக்தி வித்யைகளுக்கு நிற்க இடமெங்கே? 'உஹ்ஸம் டெவீவிஷ்ணெ விஷ்ணுஹக்தி:' என்று சந்த்ரோத யத்தில் காபாலிகன் விஷ்ணு பக்தியின் ப்ரபாவத்தை நினைத்து நடுங்கு கிறான். ஸம்ஸாரத்தின் தோஷத்தையும் ஸம்ஸாரியின் தோஷத்தையும் ப்ரமத்தின் குணங்களையும் காட்டி வைராக்யத்தையும் பக்தியையும் புகட்டுவர். இங்கே மஹாமோஹ படர்கள் ப்ரஹ்ம தோஷங்களையும் மோக்ஷத்தின் நிஸ்ஸாரதையையும் ஸ்வர்க்க ரஸத்தையும் பேசி, ஜீவன் பக்தி வைராக்யங்களை இகழும்படிக்கும் ஸ்வர்க்கத்தையே நாடும்படிக் கும் செய்ய யத்தநிக்கிறார்கள். மிக அழகிய ஒரு ஸ்லோகத்தில் ராகன் ஸ்வர்க்க ஸ்த்ரீகளை வர்ணிக்கிறான். அம்ருதத்தில் தோன்றிய ஸ்வர்க்க திலகங்களான பத்மலோசனைகளைப் புகழ்கிறான்.

“स्मेरेण स्तनकुड्मलेन भुजयोर्मध्यं तिरोधित्सितं
नेत्रेण श्रवणं लिलंघयिषितं नीलोत्पलश्रीमुषा।
अंगं सर्वमलंचिकीर्षित महो भावैः स्मराचार्यकैः
स्तन्वीनां विजिगीषितं च वयसा धन्येन मन्ये जगत्॥”

ஒவ்வோர் அவயவமும் ராகமயம். மொக்கு போன்ற தனங்கள் வாஸனை கமழ விகஸித்துப் புஜங்களின் நடுவாகிய மார்பை அடியோடு மறைக்க ஆசைப்படுகின்றன. நீலோத்பலத்தின் அழகைப் பறிக்கும் கண்கள் காதை யெட்ட ஆசைப்பட்டுக் காதுவரையில் நீள்கின்றன. மந்மதோப தேசம் செய்யும் விலாஸ பாவங்களால் ஒவ்வோர் அங்கமும் அலங்கரிக்க ஆசைப்படுகை காண்கிறது. இச்சிறுமிகளினுடைய நம் புண்ய பாக்ய மான இளம் வயஸ்ஸால் உலகமே ஜயிக்க விரும்பப்படுகிறதுபோலும். தனம் புஷ்பமொக்கு. அப்பொழு தப்பொழுது கந்தம் வீசிக்கொண்டு மலர்வதாகவே யிருக்கிறது. உதயதௌவநம் ; நித்யம் உதீயமாநம் போன்றது, யௌவந ப்ராரம்பாவஸ்தையாகவே யிருக்கிறது. இந்த அப்ஸரஸ்ஸுக்களுக்கு ஜரையில்லை. நித்யமும் யௌவநாரம்ப தசையே. ‘அம்ருதஸஹஜே’ [அம்ருதத்தோடுகூடப் பிறந்தவளே] என்று ஸ்ரீயைத் துதிப்பர். இவர்கள் அம்ருதத்தோடும் ஸ்ரீயோடும் கூடப் பிறந்தவர் கள். தாமரையின் ஸ்ரீயையும் நீலோத்பலத்தின் ஸ்ரீயையும் அபஹரிக் கும் கண்கள். எல்லா அழகுகளையும் கொள்ளையிடுவதிலும் ஜயிப்பதிலும் ஆசை. ‘ஸ்மேரேண ஸ்தநகுட்மலேந’-தனம் கர்வத்தால் சிரிப்பதுபோல் இருக்கிறது. ‘இரண்டு புஜங்களின் நடு’ என்று வக்ஷஸ்ஸை வர்ணிப் பதால், வக்ஷோஜங்களும் புஜங்களும் சேர்ந்து ஆலிங்கநம் செய்யும் ரஸம் வ்யஞ்ஜிதமாகிறது. கண்ணே காது வரையில் நீண்டு நீலோத்பல ஸ்ரீயால் கர்ணாலங்காரம் செய்வதுபோல் இருக்கிறது. ஒரோர் அவய வத்திற்கு மற்றோர் அவயவத்தில் காமம். இவர்கள் மேனி முழுவதும் மாந்மத விலாஸ ஹாவங்கள் அலங்கரிப்பதாகவே யிருக்கிறது. ‘ஸ்த்ரீ யூநாம் த்ரிபுவநவிஜயாவதிகம்’ என்று பவபூதி. லக்ஷ்மீதேவி ஜகதாசார்யகம் செய்பவள். இவ்வப்ஸரஸ்ஸுக்கள் மேனி விலாஸங்கள் ஜகத்துக்கு மந்ம தாசார்யகம் செய்கின்றன. ‘ஸம்விக்ஷிப்த ஹாவைர்ஹாவை:’ என்ற விடத்தில் ப்ரயோகமும் ஹாவே. இச்சிறுமிகளின் யௌவந பர்வமே உலகத்தையே ஜயிக்க ஆசைப்படுகிறது. ‘ஸஹாஸஹ்ர்த்ஹாஸ்ரம் ஹோகஸ்’. இங்கே க்ரியா ப்ரயோக மெல்லாம் இச்சார்த்த மான ‘ஸந்’; எல்லாம் ஆசாமயம். ‘ப்ரஸுக்ஷஸ்ய ச யௌவநஸ்ய ச ஸகே த்வயீ யஸ்ஸ- ஸ்ரீ: ஸ்தா’ என்று மாளவிகாக்நிமித்ரத்தில் புஷ்பிக்கும் தருணமான வஸந்த லக்ஷ்மியின் வர்ணநம். ராகன் மேலும் பேசுகிறான். நவ யௌவநப் பொலிவு இருக்கட்டும். விலாஸாவேசங்களைப் பார்.

अभिनयति यथार्थान् भ्रूपताका पुमर्थान्
गतिरपि गतिमन्यां मन्यते गर्हणीयाम् ।
मदकलुषितमन्तर्मन्मथाद्वैतगर्भा
मुपनिषदमधीते लोचनं लोलतारम् ॥"

மந்மதாசார்யகம் செய்வதைப் பேசினேன். குரு பங்க்தியை விஜயத்வஜமென்பர். இவள் புருவங்கள் மந்மதன் வில்; மந்மத த்வஜம். ப்ரூபதாகா꞉. இவள் புருவக்கொடியின் விலாஸ சலநங்களால், உண்மையான புருஷார்த்தங்கள் அபிப்ராயங்களால் உபதேசிக்கப்படுகின்றன. அரையர்கள் பகவத் விஷயமான ஹாவங்களை அபிநயம் செய்து உபதேசிப்பது போல. இவள் கதியோ (நடையோ) மற்றுமோர் கதியுண்டோ என்று பேரின்பம் சேர்க்கும் அர்ச்சிராதிகளையும் நிந்திக்கச் செய்யும். 'ஆசார்யஸ்து தே கதிம் வக்தா' என்பதுபோல இவள் கதி மந்மத கதியை உபதேசிக்கும். இதுவே கதி; 'நாந்யா கதி꞉' என்ற உறுதியைத் தரும். அநந்யகதித்வத்தை உபதேசிக்கும். இவர்கள் வாயாற் பேசி உபதேசிக்க வேண்டியதில்லை. மதுபாநத்தால் மத்தமான தசையில் சுழலும் கருவிழியோடு கூடிய கண்ணே ஒரே மந்மதாத்வைதத்தை யுட்கொண்ட உபநிஷத்தை ஓதும். இவர்கள் புருவ சலந விப்ரமங்களை விப்ரமமென்பதே தப்பு. அவை ஸத்யமே; யதார்த்தமே. காம புருஷார்த்தம் கானல் போன்றது; கனவு போன்றதென்பதெல்லாம் பொய். அதுதான் மெய். அதுவே 'மெய்ந்நின்ற ஞானம்', 'பொய்ந்நின்ற ஞானம்' அல்ல. இவள் நடையழகைப் பார்த்தும், மற்றோர் கதியை நினைப்பரோ? இவள் கதியின் சிந்தநமே அநுதிந பாராயணமாக வேணும். 'ஜிஹ்வா மே மதுமத்தமா' என்று தேனொழுகும் நாக்கினால் மதுரமான பகவத் குணங்களைப் புகட்ட விரும்புவர். இவள் கண்ணில் மது சொட்டும்; மது மதத்தால் கண் அழகாய்ச் சுழலும். மந்மதாத்வைதத்தை நிலைநாட்டும். அந்த அத்வைதத்தை அபரோக்ஷமாக அநுபவிக்கச் செய்யும். ஏட்டுச் சர்க்கரையல்ல. ப்ரஹ்மாத்வைதம் நிலைப்பதற்கு எத்தனையோ தகராருண்டு. 'ஆநுபவாவஸாந உபதேஶ꞉'. மந்மதாத்வைதத்தை அநுபவ பர்யந்தமாக்கும். சாப்தாபரோக்ஷம் நிலையாது. ப்ரஹ்ம வீக்ஷணத்தினால் ப்ரஹ்மாபரோக்ஷமென்பர். இவள் லோசந வீக்ஷணத்தால் மந்மதாத்வைதாபரோக்ஷம் ஸித்திப்பதில் தடையில்லை. உபநிஷத் என்பது ரஹஸ்யம். மந்மதாத்வைத ரஹஸ்யத்தை உட்கொண்ட உபநிஷதுபதேசம். கர்ப்போபநிஷத் என்று ஓர் உபநிஷத். இங்கே உபதேசிக்கப்படுவது மந்மதாத்வைத கர்ப்போபநிஷத்து.

[தொடரும்]

ஞீ:

ஞீமதே ஞீவீரராகவவரஹஹணே நம:

நாராயணனே பரதத்வம்

[கருடபுரம் வித்வான் ஸ்ரீ. உப. தி. ஈ. வரத தேசிகாசார்ய ஸ்வாமி, திருவெவ்வுளூர்]

நமஸ்தஸ்மை ஈாராஹஸ்ராஷிஷம் ஜஜ வசெ வசெ |
ஞானவெசுயாகெந யெஹஸ்ஜகாடத நம: ஸ்ரீ தர் ‖
கிம் தெஹவஜ நாயிஸொ ஜெவொ ஜஜஸ்ராஷூாஹாநி நம: |
யஸ்ஜ ரஸாஷாஜாஜொகாஷிகஜாம் நாஹூதி வஜ ரஜா: ‖

ஸ்ரிய: பதியான ஸர்வேஶ்வரன் நித்யமுக்தர்களுடன் நித்ய விபூதியில் விபூதி த்வயாவண்டாநந்தாநுபவம் செய்துகொண்டு வாழ்கிற வாழ்வை தாயப்ராப்தமானதை அநாதி கர்ம வஶத்தால் இழந்து கிடக்கும் ஸம்ஸாரிகளான நம் போன்றவர்களுக்கும் அநுபவிப்பிக்க ஸஹஜ பரம க்ருபையால் 'ஜ்ஞாநஜாதெ ஜொகாநு காராணஸ்ரா-ஷூாஷூவாணிநா' என்று அவ்வோ ஆசார்யர்களாகப் பிறந்து ஶாஸ்த்ரங்களை ப்ரவர்த்திப்பித்தான் என்பது எல்லோராலும் விதித விஷயம். நித்யமுக்தர்கள்போல் ஸர்வேஶ்வரனுடைய திருவுள்ளத்தை ப்ரத்யக்ஷமாகக் காண்பதற்குச் சக்தி இல்லாமையால் அவனுடைய அபிமதாநபிமத ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளுக்கு இருள்தருமா ஞாலத்தில் அநாதி கர்மவஶத்தால் ப்ரதிபத்த ஜ்ஞாந விகாஸத்தையுடைய நம்போன்றவர்களுக்கு ஶாஸ்த்ரம் தவிர வேறு கைவிளக்கில்லை; ஆதலால் வஸ்துக்களைத் தெரிவிக்கும் நான்கு ப்ரமாணங்களில் ஶப்த ரூபமாயுள்ளது ஶாஸ்த்ரம். இது, வேதம் ஸூத்ரம் ஸ்ம்ருதி இதிஹாஸ புராணாதி ரூபங்களாய்ப் பல வகைப்படும் அவைகளில் வேதம் முதல் ப்ரமாணம்; அதிலும் பரம தத்வ பரமஹித பரம புருஷார்த்தங்களைத் தெரிவிக்கும். பாகம் வேதாந்தம் உபநிஷத் என்று சொல்லப்படும். 'யவெஷாஜ ஷூஹஷம் ஜிதாஜ' என்று ப்ரபுபோல் நியோமவயஹ-நுயொமாநஹங்களான அநந்த வேதாந்தங்களில் பரஸ்பர பூர்வோத்தர விருத்தங்களாய் 'ஶாஷூஜூாநம் ஸஹாஜ்ஜூம் ஷாஜெஷூ ஐநகாரணஜ' என்று வாஜகவாஜஸ்நிஷ்ணாயகங்களாய் இருப்பதால், தந்நிஶ்சயார்த்தமாக 'வ்யாஸாய விஷ்ணுரூபாய வ்யாஸரூபாய விஷ்ணவே' என்று ஸர்வஜ்ஞனான ஸர்வேஶ்வரனுடைய அவதார ரூபமான வேத வ்யாஸ பகவான் என்று ப்ரஸித்த நாமதேயரான மஹர்ஷி ந்யாய கலாப ரூபமான ப்ரஹ்மஸூத்ரங்களையிட்டு ந்யாய ஸஞ்சாரங்களைப் பண்ணிப் பரமதத்வ பரமஹித பரம புருஷார்த்த நிஶ்சயங்களைச் செய்தார்.

ஸ்ரிய: பதியான நாராயணனே பரம்ப்ரஹ்ம பரமதத்வம் பரம காரணன் என்றும், அவனுடைய ப்ரீதிரூபாபந்ந தைலதாராவதவிச்சிந்ந ஸ்ம்ருதி ஸந்தாந ரூபமான உபாஸநங்களும் ப்ரபத்தியுமே பரமஹிதம் என்றும், அப்ராக்ருத தேச விசேஷத்தில் தத்ஸாயுஜ்ய ப்ராப்தியே அபுநராவ்ருத்தி லக்ஷணமோக்ஷம் பரம புருஷார்த்தம் என்றும், இந்த வேத வ்யாஸருடைய ஸூத்ராக்ஷர ஸ்வாரஸ்யத்தால் இவருடைய ஸித்தாந்தம் என்று நிர்ணயிக்கப்பட்டது. இப்பொழுது அவரால் செய்தருளப்பட்ட ஸ்பஷ்டார்த்தங்களான மஹாபாரதாதி ப்ரபந்தாந்தர ஸம்வாதங்களாலும் இதுவே வேதவ்யாஸ ஸித்தாந்தம் என்று நிரூபிக்கப் படுகிறது. 𑌤𑌥𑌾𑌹𑌿—மோக்ஷதர்ம பர்வத்தில் 357-வது அத்யாயத்தில்,

"𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌮𑌾𑌨𑌾𑌨𑌾𑌂 𑌹𑍇𑌤𑍁𑌭𑌿𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌤𑍋𑌮𑍁𑌖𑍈𑌃 |
𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑍇𑌕𑍋 𑌮𑌹𑌾𑌯𑍋𑌗𑍀 𑌹𑌰𑌿𑌰𑍍𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌃 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃" ||

என்று இந்த வ்யாஸ பகவான் அருளிச்செய்திருக்கிறார். இங்கு, தத்வ பதம் ஜகத்காரண பரம தத்வத்தைச் சொல்லுகிறது. முன் ஶ்லோகத்தில் ஸகல காரண வாக்யங்களுக்கும் நாராயணனே தாத்பர்யத்தில் பர்ய வஸாந பூமி [முடிவை அடையும் இடம்] என்று, ப்ரதிஜ்ஞை செய்து அதன் அர்த்தத்தையே உபபாதநம் செய்வதற்கு இந்த ஶ்லோகம் ப்ரவ்ருத்தமானதால் முன்னால்

"𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌂 𑌕𑌾𑌰𑌣𑌂 𑌯𑍇𑌷𑌾𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌕𑌾𑌰𑌣𑌮𑍍 |
𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌶𑍍𑌚𑍈𑌵 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌦𑍈𑌵𑌂 𑌯𑍇𑌷𑌾𑌂 𑌚 𑌕𑌾𑌰𑌣𑌮𑍍 |
𑌪𑌞𑍍𑌚𑌕𑌾𑌰𑌣𑌸𑌂𑌖𑍍𑌯𑌾𑌤𑍋 𑌨𑌿𑌷𑍍𑌠𑌾 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌵𑍈 𑌹𑌰𑌿𑌃 |"

என்ற ஶ்லோகத்தில் ப்ரதாநாதிகளைக் காரணம் என்று சொல்லும் மதங்களை அநுவதித்து '𑌨𑌿𑌷𑍍𑌠𑌾 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌵𑍈 𑌹𑌰𑌿𑌃' என்று சொல்லப்பட்டது. அந்தந்த வாதிகள் சிற்சில வாக்யங்களை யோசித்து ப்ரதாநாதிகளைக் காரணங்களாக ஒப்புக்கொண்டாலும், ஸகல வேதாந்த வாக்யங்களில் தாத்பர்யத்தில் பர்யவஸாந பூமி நாராயணனே என்று இதன் அர்த்தம். ஆகையால் பரதத்வத்தை அறியவேண்டும் என்று இச்சை உள்ளவர்களுக்குப் பலவிதமான மீமாம்ஸா ந்யாயங்களால் நாராயணன் ஒருவனே பரதத்வம் என்று நிஷ்பந்நமாகிறது. இது உட்கருத்து. ஜகத் காரணத்தைச் சொல்லும் வேதாந்த வாக்யங்களில் எது சொல்லப்பட்டிருக்கிறதோ அதுவே பரதத்வம். காரண வாக் யங்கள் பலவிதமாக இருப்பதால் ந்யாய ஸஞ்சார மில்லாமல் அர்த்த நிர்ணயம் செய்ய முடியாது. காரண வாக்யங்களில் சில அநுவாத ரூபங்களாயும், சில பொதுவாக இருக்கும் சப்தங்களால் காரண வஸ்து வைச் சொல்லுகிறதாயும், சில விஶேஷ வஸ்துக்களில் ப்ரஸித்தங்களான பதங்களால் காரணத்தைச் சொல்லுகிறதாயும் உள்ளன. 𑌤𑌥𑌾𑌹𑌿— '𑌯𑌤𑍋 𑌵𑌾 𑌇𑌮𑌾𑌨𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇'.—இது அநுவாத ரூபம். கார

ணத்தை அநுவதித்து ப்ரஹ்மத்வத்தை விதிப்பதால். 'ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத் | ப்ரஹ்மவா இதமக்ர ஆஸீத் | ஆத்மா வா இதமேக ஏவாக்ர ஆஸீத்'—இது பொதுவானது. இந்த ஸச்ப்ரஹ்மாத்ம சப்தங்கள் ப்ரதாநாதிகளிலும் ப்ரஸித்தமானதால்.—"ஸர்வாணி ஹ வா இமாநி பூதாந்யாகாசாதேவ ஸமுத்பத்யந்தே ஆகாசம் ப்ரத்யஸ்தம் யந்தி"—இது அசேதந விசேஷமான பூதாகாசத்தில் ப்ரஸித்தமானது. "ப்ராணோஸ்மி ப்ரஜ்ஞாத்மா தம் மாமாயுரம்ருதமித்யுபாஸ்வ"—இது காரணத்வ வ்யாப்ய முமுக்ஷூபாஸ்யத்வத்தை இந்த்ரனுக்குச் சொல்லுகிறதாக சேதந விசேஷமான இந்த்ரனைக் காரணமாகச் சொல்லுகிறது. இப்படியே "ஹிரண்யகர்ப்பஸ்ஸமவர்த்ததாக்ரே பூதஸ்ய ஜாதஃ பதிரேக ஆஸீத் யதா தமஸ்தந்ந திவா ந ராத்ரிர் ந ஸந்ந சாஸச்சிவ ஏவ கேவலஃ"—இவை சதுர்முக ருத்ர ப்ரஸித்தங்கள். "ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் ந ப்ரஹ்மா நேசாநஃ"—இவை முதலியன தேவதா விசேஷாஸாதாரணமான நாராயண சப்தத்தால் ஜகத்காரணத்தைச் சொல்லுகிறது. இப்படியாக இருப்பதால் ந்யாயங்களைக் கொண்டு அர்த்த நிர்ணயம் செய்யுமிடம் எழுதப்படுகிறது.

எந்தக் காரண வாக்யங்கள் நிராகாங்க்ஷ ப்ரதிபத்தியை உண்டு பண்ணுவதற்கு (அதாவது: ஒருவிதமான கேள்விக்கும் இடமில்லாமல் தெரிவிப்பதற்கு) எந்த வாக்யங்களை அபேக்ஷிக்கின்றனவோ, அந்த வாக்யங்களுடன் அந்த வாக்யங்கள் ஒன்று சேர்ந்து ஒரே அர்த்தத்தைப் போதிக்கவேண்டும். அவ்விடத்தில் அநுவாத ரூபமான 'யதோ வா இமாநி' இத்யாதி வாக்யங்கள் ப்ராபக வாக்யத்தை அபேக்ஷிக்கிறது. அதாவது: கேள்விக்குச் சரியான ஸமாதானத்தை அடைவிக்கும் வாக்யம். அப்படிப்பட்ட ப்ராபக வாக்யங்களில் பொதுவான சப்தங்கள் இருப்பதால்; அவைகள் விசேஷ ஸமர்ப்பண வாக்யத்தை அபேக்ஷிக்கின்றன. அவைகளில் விசேஷ ஸமர்ப்பணம் பண்ணி ஸாமாந்ய வாசக பதத்தை ஆமபசு ந்யாயத்தால் விசேஷிப்பித்து, ஏகார்த்த போதகமாய் அநுவாத வாக்யத்துடன் கலந்து ஒரே காரணத்தைச் சொல்லும்படியான வாக்யம் எது? எந்த வாக்யம் அப்படிப்பட்ட சக்தியுள்ளது? என்று ஆராய்ந்து பார்க்குமிடத்தில் 'ஏகோ ஹ வை நாராயண ஆஸீத்' 'ந ப்ரஹ்மா நேசாநஃ' என்ற வாக்யமே. முன் எடுத்த மற்ற வாக்யங்கள் ஆகமாட்டா. ஏனென்றால், "ஸர்வாணி ஹ வா இமாநி பூதாந்யாகாசாதேவ ஸமுத்பத்யந்தே" இந்த வாக்யத்தில் ஆகாச சப்தத்திற்கு ரூடியான பூதாகாசம் என்று விசேஷித்து அர்த்தம் சொன்னால், இது அசேதந மாகையால் இந்த ஆகாசத்திற்கு 'ஸர்வாணி ஹ வா இமாநி பூதாநி' என்று பூதங்களில் சேர்ந்த அசித் ஸம்ஸ்ருஷ்டி சேதந விஷயங்களில் காரணத்வம் கூடாமையால்

2/0114

ஸாதிதார்த்தமாகையால் ரூடியைவிட்டு யோகார்த்தத்தையே ஸ்வீகரிக்க வேண்டுமானதால் [அதாவது : ஆகாஶோக்ஷாக காஶதெ ஷூகாஶதெ— விளங்குகிறுன்] என்று பொதுவாகச் சொல்லவேண்டுமானதால் இந்த வாக்யம் விசேஷிப்பிக்காது. “ஶாஹவாஜு” என்கிற இந்த்ர வாக்யம் வ்யாபகமான காரணத்வத்தை ஸூசிப்பிக்கிறது. இதுவும் விஶேஷ ஸமர்ப்பகமன்று. ‘ஷூஜாவதிரிந்த்ரஜேஜத’ இத்யாதி வாக்யத்தால் ஸ்ருஜ்யத்வ கார்யத்வ ப்ரஹ்மஹத்யாதி அபிபூதத்வாதிகள் ப்ரஸித்த இந்த்ரனுக்கு ஏற்பட்டிருக்கிறபடியால், பரம காரணத்வ மோக்ஷோ பாயோபாஸந விஷயத்வாதிகளும் கூடாமையால், “ஊஷிவாஸஜெஷூ” என்ற வ்யுத்பத்தியால் ஆகாச வாக்யம் போல் ஸாமாந்ய பரமாகவே கல்பிக்கலாமென்றால், “திரஶீஷூாணம் கூாஷூ ஹநஞ” இத்யாதி ப்ராகரணிக வாக்யங்களால் ரூட்யர்த்த பரித்யாகத்திற்குப் பாதகம் வருகையாலும், ரூட்யர்த்த த்வாரா வேறு ஒரு மஹா புருஷனிடத்தில் பர்யவஸாநத்தை ஒப்புக்கொண்டு கூாஷூ ஹநநாதிகளை விஶேஷணத்திலும் முமுக்ஷூபாஸ்யத்வாதிகளை விஶேஷ்யத்திலும் அந்வயிக்க வேண்டும் என்று ஒப்புக்கொள்ளவேண்டு மாகையால் இது விஶேஷ ஸமர்ப்பண க்ஷமமன்று. “ஹிரண்யமஹவஷவததாமெ யடா தஜெஷ ஶிவா நாராநஷஷவாஸீஜீவவ கெவஷ:” ‖ இத்யாதி வாக்யங்களும் கேவலம் சதுர்முகனையும் ருத்ரனையும் சொல்லுகிறதில்லை. யௌகிகமாகவே அப்பதங்களுக்கு யோக்யமான அர்த்தாந்தரங்களை அர்த்தமாகச் சொல்லவேண்டும். “யொ ஹூஹூாணம் விஷயாதி வஹூ யொ வெவெஷாஂஷ ஷூஹிணொதி தஜெஷ | தஸ்யாநா ஷஷஸ ஶாடாக ஆஷஷஷாணி: வஹஷொஜாயத நாராயணாக ஷஜாயத” இத்யாதிகளால் சதுர்முகனுக்கும் ருத்ரனுக்கும் கார்யத்வம் ஏற்பட்டிருப்பதால் பரம காரணத்வம் கூடாது. ஆகையால் அவ்வாக்யங்களுக்கும் விசேஷோபஸ்தாபகத்வம் கூடாது. ஆகையால் “ஹகொஹ வெ நாராயண ஆஸீக” என்ற வாக்யத்திற்கே விஶேஷ ஸமர்ப்பணம் பண்ணச் சக்தியுள்ளது. முன் போல் நாராயணனுக்கு ஒருவிதமான கார்யத்வாதி பாதகம் காணுமை யால் யோக்யார்த்த மாகையால் காரணவாக்ய கத அஸ்ஸாமாந்ய பதங்கள் நாராயணனையே சொல்லுகின்றன. காரண வாக்யங்கள் நிராகாங்க்ஷ மாக அர்த்தத்தைச் சொல்லுவதற்கு இந்த நாராயண பத கடித வாக்யத்துடன் சேர்ந்து ஏகார்த்த போதகமாய் நாராயணனையே ஜகத்காரண மென்று சொல்லுகின்றன. ஆகையால் அவனே பரதத்வம் என்று நிஷ்பந்நமாகிறது.

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

ஸ்ரீ அஹோபிலம் விஷயங்கள்

——

[திருப்பூந்துருத்தி ஸ்ரீ. உப. வி. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் : பங்களூர்]

I

சிங்கவெற்பு

(1) மாநிலத் துயிர்கட் கெல்லா மாறில்லா தருள் சுரந்து
மேநிலந் தொடநி வந்து விளங்கிடும் பெருமை நோக்கிப்
பானிற வமுதத் திங்கள் பரிவுட னமர்ந்து சற்றே
மேனிவந் தெழுந்து செல்லும் வேதப்பேர் வெற்பொன் றுண்டு.

[இதன் பொருள்] மிகவும் விசாலமாகிய இந்த நிலவுலகத்திலுள்ள ஜீவராசிகளுக் கெல்லாம் கொஞ்சமும் மாறுபாடில்லாது பகவானுடைய அநுக்ரகத்தைப் (பவநாசினி யாறு முதலியவற்றின் ரூபமாகப்) பெருக்குவதும், மேலுலகமாகிய தேவலோகத்தை இடிக்குமாறு மிகவும் உயர்ந்து விளங்குவதும், இதனுடைய பெருமையை நோக்கிப் பால்போலும் வெண்மையான நிறத்தையுடைய அமிர்த கிரணனாகிய சந்திரன் ஓய்வில்லாது ஆகாசத்தில் சஞ்சரித்ததா லுண்டாகும் களைப்பு நீங்குமாறு ப்ரீதியுடன் சிறிதுநேரம் தங்கி இளைப்பாறிப் பின்பு எழுந்து தனது ஸஞ்சாரத்தை மேற்கொள்ளும் பெற்றி வாய்ந்ததுமான வேதவெற்பு என்னும் திருமலை யொன்றுண்டு.

(2) அடுத்த பாசுரத்தில் இந்த வேதவெற்பின் பெருமைக்குக் காரணம் சொல்லப்படுகிறது.

ஆயிர நாமத் தண்ண லமர்ந்தருள் பெருமை யார்ந்து
போயொரு காலே காணப் போகமும் வீடும் நல்குந்
தூயநல் லமர வெற்பைச் சூழ்ந்தென்றுந் தொழுது நிற்பார்
சேயுயர் விசும்பில் வாழுந் தேவர்தந் தலைவ ரெல்லாம்.

(இ - ள்) ஆயிரந் திருநாமத்தனாகிய வெம்பெருமான் தமது விஹாரங்களுக் கேற்றதென்று திருவுள்ளம்பற்றி நித்யவாஸம்செய்யும் பெருமையைப் பெற்றதும், தன்னை ஒருதடவை வந்து ஸேவிப்போருக்கு ஐஹிகமான ஸகல புருஷார்த்தங்களையுந் தந்து கடைசியில் பரமபுருஷார்த்தமான கிங்கரத்வாதி ராஜ்யத்தில் முடிசூட்டி வைப்பதும், பரம பாவநமானதுமான இந்தத் திருமலையை ஆகாசத்தில் தேவலோகங்களில் வஸிக்கும் தேவர்களுடைய தலைவர்களெல்லாம் (ப்ரக்ருதி மண்டலத்துக் கப்பாலுள்ள பரமாகாச மென்னும் பரமபதத்தில் வஸிக்கும் நித்யஸூரிக ளெல்லாம்) ஸதா காலமும் ப்ரதக்ஷிணம் பண்ணி வணங்கி நிற்பார்கள்.

(3) அடுத்த பாசுரத்தில் இந்தத் திருமலைக்குச் 'சிங்கவேழ் குன்றம்' என்னுந் திருநாமம் வந்த காரணம் சொல்லப்படுகிறது.

சிங்கமா யவுணன் தேசு சிதைந்திடத் தோன்று மண்ணல்
அங்கொரு வடிவ மொன்பா னுதரித் திருக்கை யாலே
பங்கமில் லாத விந்தப் பனிவரை யதனை நாளும்
சிங்கவேழ் குன்ற மென்னச் சிரங்களாற் றொழுது நிற்பார்.

(இ - ள்) உலகத்தை யெல்லாம் ஹிம்ஸித்த ஹிரண்யகசிபு என்னும் அவுணனுடைய தேஜஸ் அழியும்படி ஸ்ரீந்ருஸிம்ஹ ரூபியாக அவதரித்த எம்பெருமான், இந்த வேதமலையில் ஒன்பது உருவத்துடன் ஸாந்நித்யம் செய்தமையால், யாதொரு தோஷமு மில்லாத இந்தத் திருமலையைச் சிங்கவேழ்குன்றம் என்று கொண்டாடிப் பெரியோர்க ளெல்லாம் இதைத் தலைகளால் வணங்கிநிற்பார்கள்.

(4) அடுத்த பாசுரத்தில் இந்த க்ஷேத்ரத்துக்கு 'வீரக்ஷேத்ரம்' என்னும் திருநாமம் வந்த காரணம் சொல்லப்படுகிறது.

சீரிய சிங்கத் தேவன் சீற்றமிக் கெதிர்த்து நின்ற
சூரிய வவுணன் மாள முடித்திவ ணமர்ந்து தேவர்
காரியங் கொள்கை யாலே காசினி யோர்கள் நாளும்
வீரியத் தலமென் றுங்கே வழங்கியே வியந்து நிற்பார்.

(இ - ள்) ஸ்ரீ சிங்கப்பெருமான் மிகவும் சீற்றத்தோடு தம்மை எதிர்த்து வந்தவனும், வரத்தினால் பெற்ற மிகுந்த பலத்தையுடையவனுமான ஹிரண்யாஸுரன் தன்னுடைய பல மெல்லாம் நசித்துத் தானும் மாளும்படியாக அவனோடு போர்புரிந்து அவனைக் கொன்று, இந்தத் திவ்யதேசத்தில் எழுந்தருளியிருந்து தேவர்களுக்கு உபகாரத்தைச் செய்தமையால், எம்பெருமானுடைய வீர்யத்தில் ஆழங்கால் பட்ட இவ்வுலகத்தவர் இந்த க்ஷேத்ரத்தை 'வீரக்ஷேத்ரம்' என்று கொண்டாடி ஆச்சர்யப்பட்டிருப்பார்கள்.

(5) அடுத்த பாசுரத்தில் இந்த ஸ்தலத்துக்கு 'அஹோபலம்' என்னும் பெயர் வந்த வரலாறு சொல்லப்படுகிறது.

புரையிலா வமரர் கோனைப் புல்லிய வறிவாற் சீறி
சரபமா யெதிர்த்தான் நீறாய்த் தாமரை யடியில் வீழக்
கருவினர் கருத்த ழிந்து கண்ணனார் வலத்தைப் போற்றத்
திருவுடை யடிக ளீது திருவகோ பலமா மென்றார்.

(இ - ள்) 'இவ் வெம்பெருமானுடைய அஹங்காரத்தைப் போக்குகிறேன்' என்று தன்னுடைய அற்ப புத்தியினா லெண்ணி அவர்மேல் கோபித்துச் சரப ரூபமாக எதிர்த்துவந்த பொடியாடி, பொடியாகி அவர் திருவடிகளில் வீழ, அவனை ஏவிய மற்றைத் தேவர்கள் நடுங்கி எம்பெருமானுடைய பலத்தைப் பலபடியாக அஹோபலம்! அஹோபலம்!! என்று போற்ற, அதனால் ப்ரீதனாகிய எம்பெருமான், 'நீங்கள் அஹோபலம்! அஹோபலம்!! என்று போற்றினமையால் இந்த ஸ்தலம் அஹோபல க்ஷேத்ரம் என்னும் பெருமை பெறட்டும்' என்று அருளிச்செய்தார்.

(6) அடுத்த பாசுரத்தில் இதற்குக் 'காருடசைலம்' என்றும் பெயர்வந்த வரலாறு சொல்லப்படுகிறது.

சீர்கெழு தேவி மாருஞ் சேனையர் கோனு மேனைச்
சூரியர் தாமும் வந்து சூழ்ந்தநாள் விநதை மைந்தன்
காருட னென்று மிந்தப் பனிவரை யுருவங் கொள்ளக்
காருட சைல மென்றிக் கனவரை யாயிற் றூமால்.

(இ - ள்) ஸ்ரீதேவி, பூமிதேவி, நீளாதேவி என்னும் நாச்சிமார்களும், எம்பெருமானோடு இந்த ஸ்தலத்திலேயே ஸந்நிஹிதரா யிருக்க, ஸேனை முதலியார் முதலிய நித்யஸூரிகளும் இங்கே வந்து தமது அநவரத கைங்கரியத்தி லீடுபட்டிருக்க, அப்

போது விநதையின் புத்ரனாகிய திருவடிநயினார் இந்தப் பர்வதத்தில் ஆவேசித்துப் பர்வத ரூபமாக இருந்து எம்பெருமானைத் தாங்கிநின்றார். அன்றுமுதல் இம்மலைக்குக் காருட சைல மென்று பெயராயிற்று.

[இந்தப் பாசுரத்தில் குறிப்பிட்டுள்ள வரலாறுகளை ஸ்ரீ அஹோபல க்ஷேத்ர மாஹாத்ம்யத்தில் விஸ்தாரமாகக் காணலாம்.]

II

ஸ்ரீ சிங்கப்பெருமான் துதி

(1)

அஞ்சலென்றுன தின்சொலொன்றுரைத் தடியனேனைநீர் காத்திடீர்
அழகுவிஞ்சிய நயனபங்கயத் தருள்சுரந்தெனைப் பார்த்திடீர்
மஞ்சுலாவுமொர் வெஞ்சிலைதனில் மணியரங்கினைத் தேடுவீர்
மறைகள்போற்றுந மடிகளுட்டியென் மனத்திடர்தனி லாடுவீர்
அஞ்சனக்கிரி நிழல்விரித்திடு மணியுருத்தனைக் காட்டுவீர்
அடியனேன்சிறு விளையபுன்சொலு மன்புகொண்டுநீர் சூட்டுவீர்
க்ஞ்சமாமலர் வஞ்சியாளொடுங் கலிதவிர்த்திடு மையனே
கருடமால்வரை சிகரமேயவெங் கருணைமாநர சிங்கமே!

[தாமரை நாண்மல ரொன்றில் அவதரித்த வஞ்சிக்கொடிபோலும் விளங்கும் பெரிய பிராட்டியாரோடும் கூடியிருந்து இருவருமாகப் போட்டி போட்டுக்கொண்டு உலகத்தின் துன்பந் துடைக்க வந்த எம் ஐயனே! காருடசைல மென்னும் வேத வெற்பின் சிகரத்தில் அமர்ந்து இலகும் கருணாமூர்த்தியான ஹே! லக்ஷ்மீந்ருஸிம்ஹ! கதி வேறொன்றுங் காணாது நினது திருவடியே தஞ்சமென் றடைந்த தமியேனை, "நீ அஞ்சாதே உன்னை ரக்ஷிக்கிறேன்" என்று அம்ருத ப்ரவாஹத்தை யொத்த தேவரீர் திருவாக்குகளில் ஒரு வாக்கினால் கூறி ரக்ஷித்தருளக்கூடாதோ? "தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ" என்று சாந்தோக்யஶ்ருதியில் ஓதப்பட்டதும் "கம்பீராம்பஸ்ஸமுத்பூத ஸ்ம்ருஷ்ட நாள ரவிகர விகஸித புண்டரீக தளாமலாயதேக்ஷண" என்று கொண்டாடப்பட்டதும், 'கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்ட வப்பெரியவாய கண்கள்' என்று போற்றப்பட்டதுமான அழகிய திருக்கண் தாமரையின் ஸ்வாபாவிகமான அருள் சுரக்க ஒருதடவை அடியேனைக் கடாக்ஷிக்கலாகாதா! மேகங்கள் வந்து ஸஞ்சரிப்பதற்கு ஹேதுவான கடும்பாறை நிலமாகிய மலை யொன்றின்மேல் தேவரீருடைய விஹாரங்களுக்கும் நர்த்தநங்களுக்கும் ஏற்ற அழகிய அரங்கத்தைத் தேடும் தேவரீர் வேதங்களால் கொண்டாடப்படும் அழகிய திருவடிகளை நாட்டி அடியேன் ஹ்ருதயமாகிற அரங்கத்தில் ந்ருத்தஞ் செய்யக்கூடாதோ? ஒரு அஞ்சன மலைபோன்று நீலவொளியைப் பரப்பும் தேவரீருடைய அழகிய திவ்யமங்கள விக்ரஹத்தை அடியேனுக்குப் புலனாகுமாறு அநுக்ரஹித்தல் தகாதோ? வால்மீகி, வ்யாஸர், ஸ்ரீ தேசிகன் முதலிய தெய்வக் கவிகளின் சொன்மாலைகளையும் ஆழ்வார்களது இன்றமிழ் மாலைகளையும் சூடிப் பொலிவுடன் விளங்குந் தேவரீர், புன்மைக் கெல்லை நிலமான அடியேனுடைய சிறு குதலைச் சொற்களையும் திருவுள்ளம் பற்றி மகிழலாகாதோ?]

---

(2)

1. சோதிவெற்பாம் வேதவெற்பின் மீதமர்ந்த வாதிமூர்த்தி
தொன்மறைவே தற்குரைத்த நாதன்—தேவர்
சூழ்ந்திறைஞ்சும் தூயபற்ப பாதன்—முன்

தோகைமயில் பாகின்மொழி மான்றனக்கோர் வேத்தவையில்
துகிலளித்துக் காத்தளித்த நாதன்—அவள்
துணைவருக்காத் தானடந்த தூதன்
ஆதியாகிக் காணநின்ற வண்டமுற்று மாகியங்கோர்
ஆடரவிற் பாற்கடலில் துஞ்சும்—அவன்
அரக்கர்குலம் அழிக்கவந்த நஞ்சம்—தன்
அடிநிழலைச் சார்ந்தவர்தம் வினையனைத்தும் போக்குமையன்
அன்பர்கள்தம் நெஞ்சமவன் மஞ்சம்—அவன்
அழகியநற் பாதமேநம் தஞ்சம்.

2. ஆவியாகி நாதனுகி யநந்தனென்னும் பள்ளியின்மேல்
அம்புயத்தில் வந்துதித்த தேவி—எழில்
அவனிமகள் நீளையுடன் மேவி—அவர்
ஆரணப்புள் சேனைநாதன் சூழ்ந்துதொழத் தாமிலகும்
அரவிந்தம் பூத்ததொரு வாவி—இவ்
வனைத்துலகுந் தந்ததவர் நாவி
தாவியங்கோர் தூணினின்றுந் தானவன்ற னுவிகொண்டு
தாரணியுய் வித்தனரால் பண்டு—அவர்
தாளிணையே தஞ்சமெனக் கண்டு—அவர்
தாமரைத்தாள் மேவிநித்தம் போற்று மெழிற் சிங்கரெனும்
தகவுடையார் தம்மருளைக் கொண்டு—நற்
சரணமடைந் தார்தமக்குய் வுண்டு.

III
மாலோலன் பிள்ளைத் தமிழ்
(1) காப்புப் பருவம்

அந்திப் போதி லவுணன்வரை யாகம் பிளக்க வுதித்தருளி
யானை மருப்பிட் டடித்தலத்தே யாளி யிறைஞ்சு மரிமலையில்
வந்தங் கமர்ந்து மூவுலகும் மறையும் போற்று மடிநிழலில்
மன்னும் மனிசர் குறையகற்றும் மடங்கற் பெருமான் றனைக்காக்க
முந்தித் தென்ன னரசவையில் மூரி நிமிர்ந்த வாதியரை
மூது மறையால் வென்றரசன் முடித்த கிழியொன் றறுத்துகந்து
பந்தார் செல்வி கோதைதனைப் பரமன் ஏற்கத் தாங்கொடுத்துப்
பத்திமை யோடும் பட்டர்பிரான் பாடி மகிழ்ந்த பல்லாண்டே.

(2) செங்கீரைப் பருவம்

எங்குமுள னரசிங்க னெழிலுந்தி மலரொன்றி
லிவ்வுலகம் பூத்த வண்ணல்
எம்பெருமா னில்லாத விடமொன்று மிலையென்ற
விளங்குமரன் மேல்வெ குண்டு

இங்குன்ற னிறையிலேயென் றிடிபோலு மியம்பித்த
னெதிர்நின்ற வுரங்கொ ணேண
எற்றியவொர் வாளரக்க னிமைப்பொழுதிற் பிளப்புண்டங்
கிணேயடியில் மாண்டு வீழ
அங்குவந் துதித்தவொரு வற்புதமா சிங்கமே!
அஞ்சுடர்போன் றிலகு மையா!
அமுதமெழ வுடனெழுந்த பெண்ணமுத மானதோ
ராயிழையாள் வாழு மார்வா!
சிங்கவரை நெடுமுடியிற் றிகழுமொரு மேகமே!
செங்கீரை யாடி யருளே!
தினகரன்போற் றேசுடைய தேவமா லோலனே!
செங்கீரை யாடி யருளே!

(3) தாலப் பருவம்

அந்தர வானவ ரருமறை முனிவரு மையனெ மருளாளா!
அஞ்சிட வுலகெலா மருமறை வருந்திட வவுணர்செய் துயர்தீர்த்தே
வந்துன தடிதொழு மடியவர்க் கருள்கென மலரடி தொழுதெழவே
வருந்திய ஞாலந் துயரெலா மொழிந்தே மகிழ்ந்திட வருள்புரிந்தாய்!
கந்தம லர்தரு கடவுளுக் கருமறை காட்டிய பெருமானே!
காசினிக் குறுகதி காட்டிட முகிலொடு காருட வரைவிழைந்தாய்!
இந்திரன் முதலிய வந்தரத் தமரர்த மிறைவனே தாலேலோ
இந்திரை மகிழ்வுடன் வந்தமர் மடித்தலத் திறைவனே தாலேலோ.

(4) சப்பாணிப் பருவம்

கலிதவிர்த் தளித்திடுங் கடனிறக் கடவுளர்
களிப்புட னமர்ந்தருளும்
கருடன துருவிதென் றருமறை முனிவர்கள்
கைதொழு தெந்நாளும்
நிலமிசை பரவிட வருவினே கடிந்தவர்
நித்தியர் முத்தரொடும்
நிதநிதந் தொழுதெழுந் தகமகிழ்ந் துகந்திடும்
நின்மலத் தன்மையதாய்
பொலன்முடி நெடுவிசும் பணவிட வமரர்தம்
பொன்னுல கங்காளும்
புரந்தரன் வணங்கியே களிக்குமா மடங்கலார்
பொற்புடை வெற்பென்னும்
குலகிரி முடிதனி லகமழ்ந் துலவுவாய்
கொட்டுக சப்பாணி
குரைகழல் பணிந்திடு மடியவர்க் கினியனே!
கொட்டுக சப்பாணி.

(5) முத்தப் பருவம்

ஆனை மருப்பில் விளைந்திடுநல் லாணி மணிக்கும் விலையுண்டாம்
ஆடுந் தரங்கக் கடல்கிடந்தங் கார்க்குஞ் சங்கங் கரைதவழ்ந்தே
யீனு மணிக்கும் விலையுண்டா மீசன் சடைமேற் றவம்புரிந்தங்
கிந்து வுதிர்க்கும் நித்திலமு மெழிலி கான்ற வொளிர்மணியும்
மீனும் பாம்புந் தீங்கரும்பும் வேயு மளித்த முத்தினமும்
மேவும் மணியின் தரந்தெரிந்தோர் மதிக்கும் விலைபெற் றுளதாமெங்
கோனே ! சிங்கப் பெருவரைவாழ் கோவே ! விலையொன் றில்லாநின்
கொவ்வைச் செவ்வா யொளிர்முத்தங் கோமான் ! தருக தருகவே.

(6) வாரானைப் பருவம்

பாகைக் கரும்பைப் பழித்திடுமோர்
பாலின் மொழியாள் பதுமையொடும்
பாரின் மடந்தை நீளையெனும்
பாவைத் தோகை மயிலோடும்
வேகப் பெருநீர்க் கங்கையெனும்
மேவுந் தெய்வத் திருநதிக்கும்
விரசை நதிக்கு முவமைசொலும்
மிக்க பவநா சினிக்கரையில்
மாக விசும்பும் பாற்கடலும்
மதுரா புரியும் மறந்தமர்ந்த
மன்ன ! துன்னும் மலரடியே
மன்னுந் துணையா யளித்தெமக்கு
மாகப் பதமே தருமொருவா !
மடங்கற் பெருமா ! வருகவே
மலையால் கலக்கக் கடல்தந்த
மலராள் கணவா ! வருகவே.

(7) அம்புலிப் பருவம்

அலைகடல் கலக்கிய வமரர்கள் மகிழ்ந்திட வமுதமங் கெழுந்திடுநாள்
அமுதுட னெழுந்திடு மலர்மக ளுடன்வரு மம்புலி மானேயோ !
நிலைபெறு முலகினி லழகிய வனிதையர் நின்முக நேரொக்கும்
நிரைபுக ழுழுகொடு முனக்கருள் தனிமுதல் நீண்மதி ! காணிங்கே
கலைகளிற் சிறுமையுங் களங்கமு மகற்றிடுங் கருத்துனக் கிங்குண்டேல்
கருதினர் வினைகெடப் பயன்றரு மிவனெடுங் கலைமதி ! யாடுகவா
விலையிலா வமுதநற் கிரணங்க ளுனக்கருள் வித்தக னிவனே காண்
விரைகமழ் கமலையோ டுடன்வரு மதியமே ! விமலனொ டாடுகவா.

(8) சிறுபறைப் பருவம்

திருக்குறையல் நகருதித்துத் திருத்திகழ வளர்ந்தருளித்
தினமுமொரு வாயிரவ ரந்தணளர்
தீஞ்சோறங் கமுதுசெயப் பணித்தருளிப் புகழ்மலிந்து
தெய்வமகட் குமுதவலி யாகந்தோய்ந்தங்
கிருக்குமுத லாரணங்க ளீரிரண்டி னுட்பொருளை
யிந்திரையாள் கேள்வனேவந் தியம்பக்கேட்டோன்
இந்திரற்கு நான்முகற்கு மீசற்கு முதலோன்வந்
திவ்வுலகி லமர்ந்தருளுங் கோயில்தோறுஞ்
செருக்கிளரும் வேலேந்தித் தோழர்களோர் நால்வரொடுஞ்
சென்றுதொழு தடியிறைஞ்சிச் சந்தமாரத்
தீந்தேனிற் சுவைமிகுந்து நலமிகுந்து பண்ணமைந்த
தெய்வப்பா மாலைபல புனைந்தவண்ணல்
திருக்கிளர வொலித்திடுநற் பனுவல்பல மகிழ்ந்தோயெஞ்
சேவகனே ! சிறுபறைநீ முழக்குவாயே
தெய்வமலாற் செல்லவொணுச் சிங்கமலை யாளுடையாய்!
சேவகனே ! சிறுபறைநீ முழக்குவாயே.

(9) சிற்றிற் பருவம்

கந்தங் கமழும் மலரலங்கற் கடவுட் கணங்கள் அசுரருடன்
கமடஞ் சுமந்த நெடுவரையாற் கலசக் கடலைக் கலக்கியநாள்
முந்தங் கெழுந்த கடுவிடத்தை முக்கட்பெருமான் மகிழ்ந்தருந்த
முறுவல் நிலவங் கெறிக்கவரும் மூரலிளையார் விசும்பணவ
தந்திப் பிணைகள் இருமருங்குஞ் சாரத் தேரார் நிரைகதிரோன்
தன்னை நிகர்த்த மணியோடுஞ் சந்திர னேடு மெழுந்தவொரு
செந்தா மரையாள் புணர்மார்வா ! சிற்றில் வந்து சிதையேலே
சிங்கப் பொருப்பிற் றிகழ்வோய்!நீ சிற்றில் வந்து சிதையேலே

(10) சிறுதேர்ப் பருவம்

அண்டப் பிழம்பே தேராக வாரண நான்கே யுருளைகளா
வாதிப் பிரமன் சாரதியா வணிகொள் தேர்நீ நடத்தினையால்
கொண்டல் நிறத்தெங் கனியமுதே! கொவ்வைக் கனிவாய்ச் செங்கரும்பே!
கோலத் தாமரை மலர்க்கண்ணு ! கோமள வாயர் கொழுந்தேநீ
சண்டச் சமரத் தூடொருகால் தனஞ்சய னுக்குத் தேரூர்ந்தாய் !
தாளே சரணு யடைவார்தஞ் சார்வாய் நின்ற தனிமுதல்வா !
திண்டேர் முன்னே யுருட்டியநீ சிறுதே ரிங்கே யுருட்டியருள்
தேவே தொண்டர் களித்திடநீ சிறுதே ரிங்கே யுருட்டியருள்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

கலங்காக் கருணை

[ஸ்ரீ. உப. S. T. ஸ்ரீநிவாஸாசார்யர், வித்வான் M.A., L.T.]

"अप्यहं जीवितं जह्याम् त्वां वा सीते सलक्ष्मणां" என்று அடியவர்க்கு அணுவளவு துயர்வரினும் தன் உபய விபூதியையும் தன்னையும் அழியமாறியும் அவர்க்கருளும் அன்புடையவன் அம்புஜாக்ஷன் இவன் திறத்தும் இவன் அடியார் திறத்தும் ஸ்ரீ வைஷ்ணவன் எத்துணை அன்பு காட்டக் கடமை உடையவன்!

திருவரங்க நகரத்தில், இருண்ட சோலையில் விளங்கிய ஓர் ஆஶ்ரம பதத்தில் ஸ்ரீ வைஷ்ணவர்களிடை மிகுந்த பரபரப்பு உண்டாயிற்று. அவர்களுடைய அன்பும் அருளும் நிறைந்த வதநாரவிந்தத்தில் ஏதோ ஒரு துயரக் குறி நடமாடியது. "என்ன சோதனையான காலம்! ஸ்ரீரங்க துரீணன் நிஜமாகவே போகி சயநத்தில் உறங்கிப் போய்விட்டனனோ? ஐயோ! ஐயோ! எந்தப் பாபத்திற்கும் பரிஹாரமுண்டே! ஸ்ரீகாந்தன் பரதத்வமன்று என்று அறுதியிடுமாறு அந்த நராதமன் ஆஜ்ஞை பிறப்பித்து விட்டானே! இந்த மஹா பாபத்திலிருந்து நரபதியான அவன் எப்படி மீள்வன்! ஐயோ! ஆத்மாந்தமான ஹாநியைத் தேடிக்கொண்டு விட்டனனே!' என்றார் ஒருவர். "தாமரையாள் கேள்வனது அருளால் தழைத்த நம் தர்சநத்தின் கதி என்னவாயிற்று! அந்த நரபதியைப்பற்றி ஸ்வாமி, தயையால் அப்படி ஸாதித்தபடி. நம் கருணை காளமேகமான ஸ்ரீராமாநுசனிடம் அபசாரப்பட்டால் அச்சுதன் பொறானே. அவன் திருவுள்ளம் பதறிக் கொதிக்குமே. என்ன காலம்! அரசனுக்கு இப்படியா புத்தி போகவேண்டும்" என்றார் மற்றொருவர். இப்படிக் கலக்கமுற்றுச் சொல்ல மாளாத் துயரத்தில் வெதும்பி நின்றவர் பலர். ஸ்ரீ வைஷணவர்கள் குழுமியிருக்கும் காட்சிக்கு நிகர் யாது? கடல் மலை சந்திரன் நீலவானம் புயல் இவைகளைக் காண்பதைவிடப் பல்லாயிரம் மடங்கு அன்பு ஒரு ஸ்ரீவைஷ்ணவனைக் கண்டால் உள்ளத்தே பொங்கி எழுகிறது. 'அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு'.

இக் கூட்டத்தினிடை ஓர் மஹா புருஷன் வந்து நின்றார். என்ன அழகு! என்ன காம்பீர்யம்! என்ன கருணை பொழியும் கண்கள்! இப் புருஷோத்தமனைக் கண்டவர்கள் இவன் உலகத்திற்கெல்லாம் ஓர் தனி நாயகம் என்று உறுதியாய்ச் சொல்லாமலிருக்க முடியாது. பால்

போன்ற மெருகு கொண்ட அழகிய திருமேனி வண்ணம் திருக் கபோலங்களும் திருமார்பும் திவ்ய ஹஸ்தங்களும் திருவடிகளும் பல இடங்களில் சிவந்து செந்தாமரைபோல் வணங்கித் திருமேனியின் பொன் வண்ணத்தில் மின்னின. நிலவு போன்ற துவாதச புண்ட்ரம். கையிற் பிடித்த அழகிய த்ரிதண்டம். உலகத்தின் துயரொழியப் பிடித்த உத்த மாயுதம். அந்தத் திருமுகமோ திருக் கண்களோ உபய விபூதியும் தலைசாய்த்து வணங்கத் தக்க ஓர் மேன்மை; கல்லுங் கரைந்துருகத் தக்க வடிவழகு; பொழிந்து ததும்பும் கருணை.

இம் மஹாநுபாவர் ஓர் பிப்பல வ்ருக்ஷத்தின் சிலா மேடையில் உட்கார்ந்தார். யாவரும் நிம்மதியாயும் அன்பு ததும்பிய முகத்தினராயும் இம்மஹாநுபாவன் என்ன சொல்லப் போகிறானோ என்று எதிர் பார்த்தவண்ணம் அஞ்சலி ஹஸ்தராய் நின்றனர். திவ்ய புருஷன் திருப் பவளச் செவ்வாயைத் திறந்து "ஸ்ரீரங்கபதே" என்றார். என்ன குரல்! கேட்பவர் துயரம் ஒழியுங் குரல்! உடல் புளகித்து இன்பத்தால் பொங்கும் குரல்! இம் மஹா புருஷன் ஆரம்பித்தார். "எவ்வித இடரிலும் ஸ்ரீ வைஷ்ணவன் கலங்கான். பரம தயாளுவான பத்மாகாந்தன் நம் ஹிதமன்றி நல்கான்! ஆபாதமாகத் துன்பமாகத் தோன்றுபவையெல்லாம் நம் ஹிதமே யன்றி வேறில்லை. அதோ! நம் குலமணிகள்—தர்சந நேத்ரங்கள்—" என்று பெரிய நம்பிகளையும் கூரத்தாழ்வானையும் கடாக்ஷித்தாயிற்று. ஆதரத்துடனும் அன்புடனும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் வழிவிட அவ்விருவரும் அஞ்சலி ஹஸ்தராய் ஸ்ரீவைஷ்ண ஸ்ரீயே உருக் கொண்டதுபோல் அம்மஹாநுபாவனின் முன் நின்றார். "சோள பூபாலனின் முன் நம் தர்சந ப்ரதிநிதிகளாய் என் இரு கண்களான இவர்கள் செல்வார்" எனும்பொழுது அந்தத் தயாமூர்த்தியின் கண்களில் கண்ணீர் பெருகியது. உடல் குறுங்கியது. தன் கைவிரல்களால் கபோலத்தைத் தடவியவண்ணம் உதடு துடிப்பை மறைத்துக் கொண்டார். தடவிய திவ்ய கபோலத்தில் ஐந்து செந்தாமரை போன்ற சிவந்த ரேகைகள்! என்ன ஸுகுமார மேனி! என்ன கருணா ஸமுத்ரம்! "இவர்கள் செல்வார்! ஸ்ரீரங்கவல்லீ காந்தன் துணையாய் நிற்பான்! நாம் மேல்நாடு போகிறோம். வைஷ்ணவன் வானே இடிந்து வீழ்ந்தாலும் வாஸுதேவன் ஸங்கல்பம் என்று இருப்பவன்" என்றார். பேச்சு முடிந்தவுடன் அத்தயாமூர்த்தி ஏதோ த்யானித்த வண்ணம் இருந்தார். சித்ரத்தில் எழுதிய ப்ரதிமைகள்போல, அந்த ஸ்ரீ வைஷ்ணவர்கள் அம் மஹானை ஸேவித்து நின்றனர். என்ன திவ்ய ரூபம்! என்ன காம்பீர்யம்!

उपवीतिनमूर्ध्वपुण्ड्रवन्तं त्रिजगत्पुण्यफलं त्रिदण्डहस्तम्।
शरणागतसार्थवाहमीडे, शिखया शेखरिणं पतिं यतीनाम्॥

கங்கை கொண்ட சோழபுரத்தில் பேராரவாரம். "வைஷ்ணவம் ஒழிந்து யாவரும் சிவ பாரம்யத்திற்குக் கையெழுத்து இட்டே தீரவேண்டும். 'சிவாத்பரதம் நாஸ்தி' யென்று கையெழுத்து இடாதவன் தொலைந்தான். கையெழுத்திட்டால் சைவனானான். இடாவிடில் உலகத்தை விட்டே ஒழிந்தான். ஆக வைஷ்ணவப் பூண்டு ஒழிந்தது" என்று சைவர்கள் களிகூர்ந்தனர். ஓர் நிலவில் இரு கம்பீர புருஷர்கள் இம் மஹா நகரத்தில் ப்ரவேசித்தனர். இவர்களின் வடிவழகும் உயரமும் பொலிந்த திருமண்காப்பையும் கண்டவர், தம்மை அறியாதபடி ஓர் பய பக்தியால் **'अवशाः प्रतिषेदिरे'** என்றபடி சிறிது விலகிச் சென்றனர். ராஜ மார்க்கத்தில் வேதாந்திகளும் யதிகளும் ப்ரபுக்களும் காமரஸிகர்களும் ஆகிய பல்வேறு ஜநங்கள் நடமாடினர். "ஐயோ இத்தனை ஜநங்கள் நம் ராமாநுசன் சரணாரவிந்தத்தை மறந்ததுமன்றி இகழ்ந்து நரகத்திற் காவதே!" என்றனர் பெரிய நம்பிகள். இளநிலவில் அவர் திருக்கண் களில் கண்ணீர்த் துளிகள் போராடியதைக் காணலாம்.

"ஆமாம் ஸ்வாமி! தேவதாந்தர பஜநம் என்றைக்கும் ஸாதந மாக ஸ்ரீ தேவாதி தேவனுடைய திவ்ய சரணங்களில் மூட்டிவிடும். ஆனால் நம் ராமானுசனின் திருவடிகளில் அபசாரம் ஆத்மாந்த ஹாநி யாயிற்றே! "**कः क्रीडति सरोषेण पञ्चवक्त्रेण भोगिना!**" என்று அடியேன் உள்ளங் குமுறுகிறது" என்றார் ஸ்ரீ கூரத்தாழ்வான். இம்மஹாநுபா வன் யதிவேஷம் கொண்டிருந்தார்.

குலோத்துங்கனது ஸபாமண்டபத்தில், பல்லாயிரம் ஜநங்கள் குழுமினர். சிவ சிவ என்ற சப்தம் ஆயிரக்கணக்கான மிடறுகளிலிருந்து எழுந்து பரந்தது. "ஒழிந்தது இப்புதிய மதம்! அரங்கத்துத் துறவி ஆட்பட்டால், நம் சைவமே பலங்கொள்ளும். ஒழிந்தாலும் சைவம் பிழைத்தது! முக்கட்டெய்வம் வாழ்க" என்றான் ஓர் காபாலிகன். அஷ்டாதச வாத்யங்கள் முழங்கக் குலோத்துங்கன் அரியணையில் அமர்ந் தான். ஒரு படி கீழே மந்த்ரி நாலூரான் அமர்ந்தான். இம்மதியூகியே மன்னனுக்கு வைஷ்ணவர்களை அடக்கும் விஷயத்தில் பேருபகாரி. "மன்னா! பல்லாயிரம் வெறும் வைணவர்கள் 'சிவாத்பரதரம் நாஸ்தி' என்று கையெழுத்திட்டபோதிலும் அரங்கத்து இராமானுசன் ஒருவன் ஒப்பினால், நம் சைவம் பூமியெலாம் பரவும். அதிலன்றோ புத்தி செலுத்தவேண்டும்" என்று ஸ்ரீ ராமானுச திவ்ய சரணங்களில் அப சாரப்பட்ட அம்மன்னவனின் ஆத்மஹாநிக்கு அங்குரார்ப்பணம் செய் தவன். "கொண்டுவா அவனை" என்றதோர் குரல் எழுந்தது. ஒரே பேராரவாரம். அரசனது அரியணைமுன் ஓர் ராஜ புருஷன் நின்றான். "என்ன கூச்சல்?" என்றான் நாலூரான். "ஸபாமண்டபத்தின் திரு வாயிலில் ஆடல்வல்லான் என்ற நம் தெய்வத்திற்குக் கைகுவிக்க மறுக் கிறார்கள் அந்த வைணவர்கள். என்ன பிடிவாதம்!" என்றான். நாலூ

ரான் முகம் கோபத்தால் சிவந்தது. அரசன் முகமும் விவர்ணமாயிற்று. "உள்ளே கொண்டுவா" என்று கர்ஜித்தான் மன்னன். பல்லாயிரம் மனிதரிடை ஓரிருவர் நிலவன்ன பொலிவு கொண்ட நிர்மலர்—திவ்ய தம்பதிகளை த்யாநித்தவண்ணம் அக்கம்பக்கம் பாராமல்—"**नैषा पश्यति राक्षस्यो राममेवानुपश्यति**" என்றபடி பரஸ்பரம் ஸேவித்து ப்ரீதிகொண்டவராய்ப் பரமபுருஷனது நாமஜபத்தில் ஈடுபட்டவர்களாய் நுழைந்தனர். ஒருவர் யதிவேஷங் கொண்டவர். "இவனே ராமாநுசன்; நூதந மத ப்ரவர்த்தகன் திருமாலென்ற சிறு தேவைப் பரமாகப் பேசியவன்" என்றெல்லாம் ஜநங்கள் உரக்கப் பேசினர். "என்ன முக காந்தி! இவர் மாத்ரம் சைவராகில் உலகெல்லாம் நம் உமையாள் கேள்வனுக்கே உரித்தாகும்" என்றான் காபாலிகன். உரத்த குரலில் அரசன் "ஓய் ராமாநுசரே! நம் கட்டளை அறிவீரா?" என்றான். ஸபையெல்லாம் நிஶ்ஶப்தமாயிற்று. ஓர் ஊசி விழுந்தாலும் சப்தம் கேட்கும் வண்ணம் சந்தடி யடங்கிற்று. "ஓலைவல்லீர்! படியும்" என்றான் நாலூரான். உரத்த குரலில் ஓலைக்காரன் கட்டளையைப் படித்தான். அரண்மனைப் பெரிய குரு எழுந்து உரத்த குரலில் ஓர் துதிமொழி பாடி உட்கார்ந்தார். மறுபடியும் அமைதி நிலவியது. [தொடரும்]

ஶ்ரீ꞉

செய்திகள்

ஶ்ரீமதே ஶ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம꞉ ।

"களத்தூர் ஶ்ரீரங்கநாத யதீந்த்ர மஹாதேசிகன் வார்ஷிக திருநக்ஷத்ர மஹோத்ஸவம் ॥

வந்தே ஶ்ரீகாந்தவம்ஶஜலதிஸுதாராஜம் வாணீஶநாராயணம் ஸத்ஸம்ப்ரதாயம் । வித்யாஶ்ரயம் கவிதார்க்கிககேஸரிஸிம்ஹம் ஶ்ரீரங்கநாயகமுநிம் யதீந்த்ரவர்யம் ॥"

நாடுநகரமும் நன்கறிய ஶ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய திவ்யகீர்த்தியை எடுத்துக்காட்டிக்கொண்டும், ஸர்வஶாஸ்த்ர யதிர்ப்ரவசநாநுஷ்டாந ஜ்ஞாநாநுஷ்டாந விஷயவைராக்ய நித்யாலங்க்ருதராய் எழுந்தருளியிருந்தவரும், ஸம்ப்ரதாயமென்று சொல்லப்படுவதாய் ஸித்தாந்தத்துக்கு ப்ரதானமான ப்ரயோஜநமென்று ஸர்வஜ்ஞராலே நிர்ணயிக்கப்பட்டதும், ஸர்வாவதார ரஹஸ்யமான "ஜ்ஞாநமேவ முக்திஸாதநம்" என்று தீர்மானித்து, அந்த ரஹஸ்யத்தை தமது ஸம்ப்ரதாயப்ரவசநமாக அநுஷ்டித்து, ஸுலக்ஷணக்ஷமாதயாதிகளோடொக்க ஜகத் ப்ரக்யாதி பெற்றவரும், ஔதார்யாதி கல்யாணகுணநிதியாக ஶ்ரீஅஹோபிலமட திவ்யஸ்தாநத்தில் 35-வது பட்டத்தில் எழுந்தருளியிருந்தவருமான களத்தூர் "ஶ்ரீவண் ஶடகோப யதீந்த்ர மஹாதேசிகன்" ஶ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய ஸம்ப்ரதாய கைங்கர்ய ஸாம்ராஜ்யாநுபவத்தோடு சித்ரபாநு ௵ புரட்டாசிமீ 18௳ (3—10—1882) முதல் ஸர்வதாரி ௵ ஆடிமீ 28௳ (10—8—1888) வரையில் ஶ்ரீமடாதிஷ்டிதராய் எழுந்தருளியிருந்தார்.

இப்படிப்பட்ட மஹாதேசிகனிடம் ஸ்வாத்மரக்ஷாபரஸமர்ப்பணத்தை உக்திநிஷ்டாபூர்வமாக அநுஷ்டித்து, தன்னை ஆஸ்ரயித்தவர்களுக்கு உபய வேதாந்த க்ரந்த காலக்ஷேபாதிகளை ஸாதித்துக்கொண்டு, நிஸ்ப்ருஹராய் எழுந்தருளியிருப்பவரும், ஸ்ரீ அஹோபில மடத்தில் 37-வது பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ பிள்ளைபாக்கம் அழகியசிங்கரிடம் ஸந்ந்யாஸாஸ்ரமத்தில் அசேஷ வேதாந்த க்ரந்த காலக்ஷேபம் செய்து தத்காலம் அடியோங்கள் போன்ற மந்தமதிகளுக்கு அநுக்ரஹிப்பவரும், அதிசயிதஜ்ஞாநாநுஷ்டாந கல்யாண குணாலங்க்ருதராயும், கோயம்புரி [கோயமுத்தூர்] யில் எழுந்தருளியிருக்கும் சுண்டப்பாளையம் வித்வான் ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி, தன்னுடைய திருமாளிகையாகிற "ஸ்ரீ நிகமாந்தநிகேதந"த்தில் "குரூணாம் ஜந்மநக்ஷத்ரம் ஸம்பூஜயேத்" என்று விதித்திருப்பதை அநுஸரித்து மேற்கண்ட ஸ்ரீ அழகியசிங்கரின் வார்ஷிக மஹோத்ஸவத்தை ப்ரதிஸம்வத்ஸரம் நடத்திவந்த வழக்கம் போல்இவ்வருஷமும் அநுஷ்டிக்கத் திருவுள்ளம்பற்றி நாளது வைகாசிமீ 3வ திங்கட்கிழமைமுதல் ஸ்ரீ வைஷ்ணவோத்தமர்களைக்கொண்டு திவ்யப்ரபந்தபாராயண வேதபாராயண இதிஹாஸபுராணாதி க்ரந்த பாராயணங்களை ஸவிஸ்தாரமாகச் செய்வித்து 7வ வெள்ளிக்கிழமைய தினம் சாத்துமுறை செய்து ததங்கமான ததீயாராதநத்தையும் யதோசித ஸம்பாவனைகளையும் அவரவர்களுக்குச் செய்து, அதனால் ஸர்வாந்தர்யாமியான ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய திருவுள்ளம் உவக்கும்படி செல்தருளினர்.

இந்த கைங்கர்யமானது ப்ரதிஸம்வத்ஸரம் ஸ்ரீ அழகியசிங்கருடைய அநுக்ரஹத்தாலும், ஆஸ்திக சிரோமணிகளின் ஸ்ரத்தையாலும், அபிவ்ருத்தியாகி நிர்விக்நமாக நடந்துவருகிறது. இம்மஹோத்ஸவம் மேன்மேலும் 'வர்த்ததாமபிவர்த்ததா'மென்று அபிவ்ருத்தமாகவேண்டுமென்று ஸர்வாந்தர்யாமியான ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனும் ததவதாரமூர்த்தியான ஸ்ரீ அழகிய சிங்கரும் அநுக்ரஹிக்கவேண்டுமென்று இதாநீம் ஆஸ்தாந நிர்வாஹதுரந்தரராக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகியசிங்கரின் திருவடிகளில் ஸதா ஸர்வ காலமும் ப்ரார்த்தித்து நிற்கும் **வரங்கல் வங்கீபுரம்** ரங்காசார்யர்.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

ஸ்வபாநு ஆனிமீ

1வ செவ்வாய்	—	(த்வாதசி) சூந்ய திதி ஷடசீதி, ஸங்க்ரமண தர்ப்பணம்.
2வ புதன்	—	மிதுந சுக்ல சதுர்த்தசி திதி.
3வ வியாழன்	—	மிதுந சுக்ல பூர்ணிமா திதி.
14வ திங்கள்	—	ஸர்வ ஏகாதசி.
18வ வெள்ளி	—	அமாவாஸ்யை.
28வ திங்கள்	—	ஸ்ரீ அழகியசிங்கர், பெரியாழ்வார் திருநக்ஷத்ரம்
29வ செவ்வாய்	—	ஸ்மார்த்த சயந ஏகாதசி.
30வ புதன்	—	(வைஷ்ணவ ஏகாதசி வ்ரதம்,) மிதுந சுக்ல த்வாதசி திதி.
31வ வியாழன்	—	மிதுந சுக்ல த்ரயோதசி திதி.
32வ வெள்ளி	—	சூந்ய திதி, தக்ஷிணாயந புண்யகாலம், கடக ரவி 34-36.

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

योऽन्तः प्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरः स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய ஸஞ்சாரம்

சென்ற நாலு ஐந்து மாஸங்களாக ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் க்ஷீர நதீ ப்ராந்தங்களில் வஸிக்கும் ஆஶ்ரிதர்களை அநுக்ரஹித்துக்கொண்டு க்ராமாத் க்ராமம் ஸஞ்சரித்து வருகிறான் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். அநேக க்ராமங்களைத் தனது திருவடிகளால் அலங்கரித்து விட்டு, சென்ற சித்திரை மாஸத்தில் திருப்பாற்கடல் என்னும் ஸ்தலத்திற்கு எழுந்தருளி அவ்விடத்தில் பல திநங்கள் வாஸம் செய்தருளினான். அந்த ஸ்தலத்தில் தங்கும்படி திருவுள்ளம் உகந்ததற்கு ஹேது உண்டு. பிராட்டி அவதரித்த ஸ்தலத்தின் பெயரை அது வஹிக்கின்றதன்றோ? “यदर्थमंबोधिरमन्थ्यबन्धि च” ஸமுத்ரத்தைக் கடையும்படியாகவும் அதில் அணைகட்டும்படியாகவுமன்றோ இருக்கின்றது அவளிடத்தில் அவனுக்குள்ள வ்யாமோஹம்? பிராட்டியின் ஸாக்ஷாத் திருவவதார ஸ்தலமில்லாவிடினும், அதன் நாம ஸாத்ருஶ்யத்தை வஹிப்பதே போதுமானது அந்த மாலோலனுக்கு. “सादृश्यप्रतिकृतिदर्शनैः प्रियायाः” என்றும், “वियोगे चायोगे प्रियजनसदृक्षानुभवनम्” என்று மன்றோ இருக்கின்றது காமுகர்களுடைய வ்ருத்தி?

திருப்பாற்கடலில் எழுந்தருளியிருந்த காலத்தில் ஸ்ரீகளத்தூர் அழகியசிங்கர் என்று ப்ரஸித்தரான ஸ்ரீமத் அஹோபில மடம் திவ்யாஸ்தாநம் 35-வது பட்டத்தை அலங்கரித்த ஸ்ரீவண் ஶடகோப ஸ்ரீரங்கநாத ஶடகோப யதீந்த்ர மஹா தேஶிகனுடைய வார்ஷிக திருநக்ஷத்ரம் ஸம்பவித்தது. அந்த அழகியசிங்கர் ஆஸ்தாநத்திற்கு எழுந்தருளியது சித்ரபாநுஸ்ரீ புரட்டாசிமீ 19உ (3—10—1882). இப்பொழுது அறுபதாவது ஸம்வத்ஸரம் பூர்த்தி அடைந்து அறுபத்தோராவது ஸம்வத்ஸரம் நடைபெறுகின்றது. இந்த ஸம்வத்ஸரத்திய திருநக்ஷத்ரத்தை இப்பொழுது எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீ வைஷ்ணவோத்தமர்களைக் கொண்டு திவ்ய ப்ரபந்தாத்யயநம் வேத பாராயணம் இதிஹாஸ புராணாதி படநம் முதலியவைகளை ஸவிஸ்தாரமாகச் செய்வித்து யதோசித ஸம்பாவனைகளையும் செய்து, அதனால் ஸ்ரீலக்ஷ்மீ

ந்ருஸிம்ஹனுடைய திருவுள்ளம் உகக்கும்படி செய்தருளினார். திருப்பாற்கடலை விட்டு ஸ்ரீ சோளஸிம்ஹபுரம் திருப்பதி முதலிய ஸ்தலங்களுக்கு ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு யாத்ரையாய் எழுந்தருளிவிட்டதாக அறிகின்றோம். ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் இம்மாதிரி யாத்ரோத்ஸவம் கண்டருளி பஹு காலமாயிற்று. அவனது ஸங்கல்பத்தை யார் அறியக்கூடும்? எவர்களை எப்பொழுது அவன் அநுக்ரஹிப்பான் என்பதை யார் சொல்ல ஶக்தர்? **“यमेवैष वृणुते तेन लभ्यः”**. அவன் வரிக்கும்படியாக அத்யர்த்த ப்ரீதியை அவனிடத்தில் நாம் செய்தால் அவன் நம்மை வரிப்பான் என்பதில் ஆக்ஷேபமில்லை. அந்த ப்ரீதியையும் அவனே கொடுத்தருள வேணுமன்றோ?

*   *   *   *   *

“விஶேஷார்த்த ரத்ந நிதி”

பெரிய வித்வான்கள் மத ஸம்பந்தமாக உபந்யாஸங்களைச் செய்து வரும்பொழுது இதிஹாஸ புராணம் முதலிய க்ரந்தங்களிலிருந்து அநேக திவ்ய ஸூக்திகளை ப்ரஸக்தாநுப்ரஸக்தமாக அநுவதித்து, அந்த ஸூக்திகளுக்குத் தம் தம் புத்தி ஶக்திக்குத் தக்கவாறு ரஸவத்தான அர்த்த விஶேஷங்களை வர்ணிப்பது வழக்கம். அம்மாதிரி கணக்கற்ற உபந்யாஸங்களைக் காஞ்சீ ஸ்ரீ. உப. வே. ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி மதராஸில் அநேக வருஷ காலமாகச் செய்து வருகிறார். அந்த உபந்யாஸங்களில் அநுவதிக்கப்படும் மஹர்ஷி வசநங்களும் ஆழ்வார் ஆசார்யர்களுடைய திவ்ய ஸூக்திகளும், ரஸிகர்களெல்லாரும் கேட்டு ஆநந்திக்கும்படி, விவரிக்கப்பட்டு வருகின்றன. அந்த விவரணங்களைத் தவறாது கேட்டு அநுபவித்தவர்களுள் ஒருவரான மயிலை ஸ்ரீ. உப. பண்டித க்ருஷ்ண ஸ்வாமி ஐயங்கார் என்பவர், அந்த அநுபவம் கேவலம் தாத்காலிகமாகப் போகக் கூடாதென்றும் ரஸிகர்களெல்லாரும் அதை அநுபவிக்கவேண்டுமென்றும் எண்ணி, அந்த விஶேஷார்த்தங்களுள் பலவற்றை ஒன்று சேர்த்து அவைகளை **‘விஶேஷார்த்த ரத்ந நிதி’** என்னும் பெயருடன் ஒரு புஸ்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறார். அதில் ஒரு ப்ரதியை நாம் வரப் பெற்றோம். அதைப் படித்து அளவற்ற ஆநந்தத்தையும் அநுபவித்தோம்.

அந்த ரத்நங்களுள் “மாரீசனைப் பற்றியதோர் ரஸோக்தி” என்பது ஒன்று. அதில் ஸ்ரீ அண்ணங்கராசார்ய ஸ்வாமி, ராவணன் ஒரு படுபாவியாக நிந்திக்கப்படுவதுபோல மாரீசனும் மிகவும் நிந்திக்கத் தகுந்தவனென்றே நினைக்கவேண்டியிருக்கையிலும், மாரீசனுடைய தன்மையை நன்கு ஆராய்ந்து பார்க்குமளவில் இவனை ப்ரதிகூலனென்று நினைக்க ந்யாயமில்லையென்று சிற்சில ஹேதுக்களைக்கொண்டு ஊஹிக்கிறார். அந்த ஹேதுக்களுள் முதலாவது, ராவணன், ‘ஸீதையை அபஹரித்து வருவதற்கு நீ ஒரு உதவி

செய்ய வேண்டும்' என்று மாரீசனைக் கேட்டபொழுது, மாரீசன் 'அந்த மஹாநுபாவனுடன் உனக்கு த்வேஷமாகாது; இப்பேச்சை விட்டுவிடு; இதை நெஞ்சிலும் நினையாதே' என்று யுக்தமாக நற்புத்தி உபதேசித்தான் என்பதே. இரண்டாவது, ராவணன் மறுபடியும் மாரீசனிடம் வந்து நய பயங்களினால் அவனைத் தன் சொல் வழிப்படுத்திக் கொண்டபொழுது, மாரீசன் ராவணனுடைய நிர்பந்தம் பொறுக்கமாட்டாமல் மனம் நொந்து கொண்டே உடன் பட்டு வந்தான் என்பதே. மூன்றாவது, மாரீசன் ராகவனை நெடுந் தூரம் இழுத்துக்கொண்டு போகவே, ராகவன் அவனை ராக்ஷஸனென்று தெறிந்து அவன் மீது பாணத்தை ப்ரயோகம் செய்த பொழுது, அவன் 'ஹா லக்ஷ்மண! ஹா ஸீதே! கெட்டேன்' என்று ராகவனைப்போல கூச்சலிட்டுக்கொண்டு மரணம் அடைந்தான் என்பதே. இவ்வாறு அவன் கூச்சலிட்டது ராகவனுடைய ஆநுகூல்யத்தை உத்தேசித்துச் செய்யப்பட்டிருக்கவேண்டுமே தவிர்த்து ராவணனுக்கு உபகாரம் செய்யவேண்டுமென்னும் எண்ணத்தினாலிருக்கமாட்டாது. இதுதான் அந்தஸ்வாமியின் நிர்வாஹம். இது மிகவும் யுக்தியுக்தமானதே, இதன் கருத்து என்னவென்றால்—'மனம் நொந்து கொண்டு வந்த மாரீசனுக்கு ராவணன் திறத்தில் உபகாரம் செய்யவேண்டுமென்னும் எண்ணம் அஸம்பாவிதம். தான் மாண்டொழிவதுபோல் ராவணனும் மாண்டொழிய வேண்டுமென்று எண்ணங்கொண்டே அவன் ராகவனைப்போல் கூச்சலிட்டிருக்கவேண்டும். இம்மாதிரி அவன் கூச்சலிடாமற் போனால் பிராட்டி லக்ஷ்மணனைப்பிரிய நேர்ந்திராது; ராவணன் பிராட்டியை அபஹரிக்கவும் நேர்ந்திராது; அது நிமித்தமாக அவன் மாண்டு போகவும் நேர்ந்திராது. மாரீசன் போட்ட கூச்சலே ராவண ஸம்ஹாரத்திற்கு மூல காரணமாக நின்றமையால் ராகவன் விஷயத்தில் அவன் உபகாரகனென்றே நினைக்க வேண்டும்' என்பது தான்.

இவ்வாறு ரஸவத்தாகவும் யுக்தியுக்தமாகவும் உபபாதித்து விட்டு, இந்த ரஸிகோத்தமர், மாரீசனுடைய வாக்யமொன்றை நிதர்ஶநமாகக் காட்டி அவனைப் பாகவதனென்று கொள்ளுவது அநுசிதமாகமாட்டாது என்று உபஸம்ஹரிக்கிறார். அந்த வாக்யம் என்னவென்றால் :— "**अप्रमेयं हि तत्तेजो यस्य सा जनकात्मजा**" பிராட்டியின் ஸ்வரூபத்தையும் வைபவத்தையும் அறியாதவனுடைய முகத்திலிருந்து இம்மாதிரியான வார்த்தை உதிக்குமோ? "**व्यक्तमेष महायोगी परमात्मा सनातनः**" என்னும் மண்டோதரியின் சொல்லை ஒத்ததன்றோ இந்தப்பேச்சு? ராக்ஷஸர்களிடத்திலும் தைவ ப்ர்க்ருதி ஸம்பாவிதமே.

ஆனால், 'மஹர்ஷிகளை ஆயிரக்கணக்காகக் கொன்ற மாரீசனுக்குப் பாகவதத்வம் ஸம்பாவிதமென்று சொல்ல அடுக்குமோ? ராகவனுடைய பராக்ரமத்தை நினைத்து பயந்தே அவன் ராவண

னுக்கு நற்புத்தியை உபதேஶித்தானென்று சொல்ல அமையாதோ? ராவணனுடைய கையால் மாள்வதைக் காட்டிலும் ராகவன் கையால் மாள்வோமென்று சொன்னதும் மனம் நொந்து வெறுப்பால் சொன்னதாகாதோ?' என்று ஒரு ஶங்கை ஜநிக்கலாம். அப்பொழுது, 'அவன் ராகவனைப்போல் கூச்சலிடுவானேன்? இனி மரணம் நிஶ்சயம் என்று தெளிந்தவனுக்கு ராவணனுடைய ஆஜ்ஞைப்படி கூச்சலிட வேண்டுமென்று எண்ணம் உண்டாகுமோ? தான் ஜீவித்திருப்போமென்று நம்பிக்கை இருந்தாலன்றோ ராவணனிடத்திலிருந்து பயந்து தனக்கு அநிஷ்டமாயிருக்கையிலும் அவனுடைய இஷ்ட பூர்த்தியைச் செய்யத் தோன்றும்?' என்று ஒரு கேள்வி பிறக்கும்?

இந்தக் கேள்விக்கு ஸ்ரீ அண்ணங்கராசார்ய ஸ்வாமி சொல்லியிருப்பதே யுக்தமான ஸமாதாநம். பின் வருமாறும் ஒரு ஸமாதாநம் சொல்லலாமோவென்று தோன்றுகின்றது. மாரீசன் பால்யம்முதல் ராவணனுக்கு தாஸ்யம் பூண்டவன். ராவணன் மஹாராஜனாகவும் இவன் அவனது ப்ரஜைகளுள் ஒருவனாகவும் இருப்பதுடன் அவனுடைய ஆஜ்ஞைப்படி நடப்பவனாகவும் பஹுகாலமாக வர்த்தித்து வந்திருக்கிறவன். இம்மாதிரியான பழக்கம் அவனுடைய மனத்தில் ஊறியிருந்தபடியால், அந்தப் பழக்கமே இப்பொழுதும் அவனைப் பரவஶமாக ராவணனுடைய ஆஜ்ஞைப்ரகாரம் நடக்கும்படி செய்திருக்கலாமோவென்று நினைக்கிறோம். ராவணன் மீது அவனுக்கு ஜநித்த வெறுப்பும் கோபமும் இப்பொழுது உண்டானது; சிரகாலமாக அநுவர்த்தித்து வந்துள்ள பழக்கத்தை மாற்றுவதற்கு அது அஶக்தம். ஸந்தர்ப்பமும் ப்ராண வியோக காலம்; அம்மாதிரி காலங்களில் சிர பரிசிதமான நடவடிக்கையே ஓங்கி நின்று நமக்கு இயற்கையாயுள்ள ஸ்வாதந்த்ர்யத்தை இழக்கச்செய்யுமன்றோ? அப்படி ஸ்வாதந்த்ர்யத்தைப் பூர்ணமாக இழக்காமல் கார்யாகார்யங்களை ஆலோசித்துப் பார்க்க ஸ்வல்ப ஶக்தி அந்த ஸமயத்திலும் அவனுக்கு இருந்தது என்று வைத்துக்கொண்டாலும், ராவணனிடத்தில் தான் செய்த ப்ரதிஜ்ஞையைப் பரிபாலநம் செய்யவேண்டுமென்னும் எண்ணம் தாத்காலிகமாக அவன் மநஸ்ஸில் உதித்துமிருக்கலாம். தனக்கு அநிஷ்டமாக இருந்தாலும் தான் செய்த ப்ரதிஜ்ஞையை நிறைவேற்றவேண்டும் என்னும் புத்தி விஶேஷம் அம்மாதிரி காலங்களில் எப்படிப்பட்டவனுக்கும் தோன்றுவது ஸஹஜமே. அடியேனுடைய சிற்றறிவுக்குத் தோன்றியதை விண்ணப்பம் செய்துகொண்டேன். நிர்ணயத்தில் ரஸிகர்களே ப்ரமாணம்.

तं दुर्दर्शं गूढमनुप्रविष्टं गुहाहितं गह्वरेष्ठं पुराणम् ।
अध्यात्मयोगाधिगमेन देवं मत्वा धीरो हर्षशोकौ जहाति ॥ १२ ॥
एतच्छ्रुत्वा संपरिगृह्य मर्त्यः प्रवृह्य धर्म्यमणुमेतमाप्य ।
स मोदते मोदनीयं हि लब्ध्वा विवृतं सद्म नचिकेतसं मन्ये" ॥ १३ ॥

இந்த வாக்யத்தில் பதங்களின் யோஜனை பின் வருமாறு செய்யப்பட்டிருக்கின்றது :—'**कामस्य आप्तिं कर्मणः प्रतिष्ठां, अभयस्य पारं [विद्यायाः] प्रतिष्ठां [च] दृष्ट्वा धीरस्त्वं अत्यस्राक्षीः**' [லௌகிக காமங்கள் அடைவதைக் கர்மங்களின் பலமென்றும், மோக்ஷம் அடைவதை வித்யையின் பலமென்றும் அறிந்து, நீ கர்ம மார்க்கத்தை த்யஜித்து விட்டாயன்றோ?] இந்த யோஜனையில் இரண்டு மார்க்கங்களுக்கும் பரஸ்பரம் உள்ள தாரதம்யம் வெளியாகின்றது. ஆனால், இதில் சில பதங்களை அத்யாஹாரம் செய்துகொள்ள வேண்டியிருக்கிறது. அப்படிப் பதங்களை அத்யாஹரித்துக் கொள்வது ஶ்லாக்யமன்றாதலால் வேறு யோஜனையையும் செய்யலாமென்று பாஷ்யகாரர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்: **कामस्य आप्तिं क्रतोरानन्त्यं अभयस्यपारं [इत्येतत्सर्वं] प्रतिष्ठां दृष्ट्वा** [ஸர்வ காமாவாப்தியையும், அநந்தங்களான பலத்தை உடைய க்ரதுக்களின் தன்மையையும், அபயமான மோக்ஷத்தையும் இவை முதலிய அநந்த ஸ்திர பலத்தை அறிந்து நீ கர்மமார்க்கத்தை த்யஜித்தாயன்றோ?] என்பதுதான். இந்த யோஜனையில் எல்லா விஶேஷணங்களும் மோக்ஷபரமாக எடுத்துக்கொள்ளப் படுகின்றன.

12—13. இவ்வளவு தூரம் மோக்ஷ மார்க்கத்தைப் புகழ்ந்து பேசிவிட்டு, இப்பொழுது நசிகேதஸ்ஸால் வரிக்கப்பட்ட மூன்றாவது கேள்விக்கு ப்ரதிவசநம் அளிக்கிறார்.

[ப - ரை] **दुर्दर्शम्** [7-வது மந்த்ரத்தில் சொல்லியிருக்கிற ப்ரகாரம்] பார்ப்பதற்கு அஶக்யமாயும், **गूढम्** - [நமக்குக் கோசர மாகாமல் குணத்ரயத்தால்] மறைக்கப்பட்டும், **अनुप्रविष्टम्** - ஶரீரங்களின் உள்ப்ரவேஶித்தும், **गुहाहितम्** - அந்த ஶரீரத்திலும் [ஹ்ருதயமாகிற] குஹையில் இருந்துகொண்டும், **गह्वरेष्ठम्** - அதற்கும் அந்தர்க்கதமான ஜீவாத்மாவின் உள்ளில் அந்தர்யாமி ரூபமாக இருந்துகொண்டும், **पुराणम्** - ஆதியற்றும் இருக்கும், **देवम्** - பரமாத்மாவை, **अध्यात्मयोगाधिगमेन** - ஆத்ம ஸம்பந்தமான யோகத்தால் கிடைக்கக்கூடிய ஶுத்த ஜீவாத்ம ஜ்ஞானத்தைக்கொண்டு, **मत्वा** - உபாஸித்து, **धीरः** - புத்திசாலியாயிருப்பவன், **हर्षशोकौ** - ஸந்தோஷம் துக்கம் இவை இரண்டையும் [அதாவது லௌகிக காமம் கிடைப்பதால் உண்டாகும் ஸந்தோஷம், அது கிடைக்காததால் உண்டாகும் ஶோகமும் இவை இரண்டையும்], **जहाति** - விடுகிறான்.

मर्त्यः - மநுஷ்யன் [அதாவது, முமுக்ஷுவா யிருப்பவன்], **एतत्** - இதை [அதாவது :—இந்த ஆத்ம தத்வத்தை], **श्रुत्वा** - கேட்டு, **संपरिगृह्य** - மநநம் த்யாநம் இவைகளைச் செய்து, **धर्म्यम्** - கர்மத்தால் ஏற்பட்டுள்ள [ஶரீரத்தை], **प्रवृह्य** - விலக்கி [அதாவது :—த்யஜித்துவிட்டு], **अणुम्** - அதி ஸூக்ஷ்மமா யிருக்கும், **एतम्** - இந்தப் [பரமாத்மாவை], **प्राप्य** - அடைந்து [அதாவது : ஒரு தேஶ விஶேஷத்தில் அடைந்து], **सः** - அந்த [வித்வாந்], **मोदनीयम्** - ப்ரீதி விஷயமாயிருக்கும் [தனது ஸ்வரூபத்தை] **लब्ध्वा** - பெற்று, **मोदते** - ஆநந்திக்கிறான். [இவ்வாறு கேள்விக்கு ப்ரதி வசநத்தை அளித்துவிட்டு, ‘நசிகேதஸ்ஸே! உனக்கு மோக்ஷம் கைவசமாகிவிட்டது’ என்று அவனைப் புகழ்ந்து பேசுகிறார்.] **नचिकेतसम्** - நசிகேதஸ்ஸுக்கு, **सद्म** [ப்ரஹ்ம ரூபமான] ஸ்தாநமானது, **विवृतम्** - திறந்திருக்கின்றதென்று [அதாவது : தடையின்றி ப்ரவேஶிக்கத் தகுந்ததாகி விட்டதென்று], **मन्ये** எண்ணுகிறேன்.

अध्यात्मयोगाधिगमेन - ‘ஆத்மாவினிடத்தில்’ என்னும் அர்த்த முள்ளது ‘அத்யாத்ம’ என்னும் பதம். ஆகையால் ‘அத்யாத்ம யோகம்’ என்பதற்கு ‘மநஸ்ஸை விஷயங்களிலிருந்து திருப்பி ஆத்ம வஸ்துவினிடத்தில் நிலை நிறுத்துவதாகிற யோகம்’ என்பது பொருளாகும். அப்படிப்பட்ட அத்யாத்ம யோகத்தால் உண்டாகும் அதிகமமாவது ஜீவாத்ம ஜ்ஞாநம். ‘அந்த ஜ்ஞாநத்தை ஹேதுவாகக்கொண்டு’ என்பது திரண்ட பொருள். பரமாத்ம ஜ்ஞாநம் பெறுவதற்கு ஜீவாத்ம ஜ்ஞாநம் ஹேது என்பது ஶாஸ்த்ரம்.

இந்த மந்த்ரத்தில் **अध्यात्मयोगेन** இத்யாதியால் ப்ராப்யத்தின் ஸ்வரூபமும், **मत्वा** - என்பதால் உபாயத்தின் ஸ்வரூபமும் **‘धीरो जहाति’** என்பதால் ‘ப்ராப்தாவின் ஸ்வரூபமும் ப்ரஸ்தாவிக்கப் படுகின்றன. இந்த மூன்றின் ஸ்வரூபங்களையே நன்றாக ஶோதித்து உபதேஶிக்க வேண்டுமென்று மேல் 14-வது மந்த்ரத்தில் நசிகேதஸ் மறுபடியும் ப்ரார்த்திக்கிறான். இந்த மூன்றுமே பிற்பாடு விஸ்தாரமாக உபதேஶிக்கப்படுகின்றன. இதனால் **‘येयं प्रेते’** என்னும் மந்த்ரத்தில் நசிகேதஸ்ஸால் கேட்கப்பட்டுள்ள விஷயங்களும் இம்மூன்றாகவே இருத்தல் வேண்டும் என்பது விளங்கும்.

இந்த மந்த்ரம் ஜீவாத்மாவை ப்ரதிபாதிக்கின்றதென்றும், அந்தக் காரணத்தால் கீழில் **‘श्रवणायापि’** இத்யாதியான 7-வது மந்த்ரத்தையும் ஜீவ ப்ரதிபாதகமாகவே எடுத்துக்கொள்ளலாமென்றும், அப்படி எடுத்துக்கொண்டால் அந்த 7-வது மந்த்ரத்துக்கும் பகவத் கீதையிலுள்ள அதைப்போலிருக்கும் **“आश्चर्यवत्पश्यति’** இத்யாதியான ஶ்லோகத்திற்கும் ஐகார்த்யம் ஏற்படுகிறதென்றும் சில பூர்வ பக்ஷிகள் வாதிக்கிறார்கள். ‘இந்த மந்த்ரத்தில் **‘देवम्’** என்னும் பதம் பரமாத்மாவையே குறிக்கக் கூடியதாகையால் இதை ஜீவாத்ம பரமாக எப்படி எடுத்துக்

"अन्यत्र धर्मादन्यत्राधर्मादन्यत्रास्मात् कृताकृतात् ।
अन्यत्र भूताच्च भव्याच्च यत्तत्पश्यसि तद्वद" ॥ १४ ॥

கொள்ளக்கூடும்?' என்றால், 'கீழே இந்த உபநிஷத்தின் முதலாவது வல்லியில் 17-வது மந்த்ரத்தில் தென்படும் **देवम्** என்னும் பதத்தை ஜீவாத்ம பரமாக வ்யாக்யாநம் செய்யவில்லையா? அவ்விடத்தில் '**देवम्**' என்னும் பதத்தை 'தேவனை அந்தராத்மாக உடைய' என்று பொருள் படுத்தியதுபோல இவ்விடத்திலும் ஏன் அம்மாதிரி செய்யக் கூடாது?' என்று ஆக்ஷேபிக்கிறார்கள். இதற்கு ஸமாதாநம் ஒன்றே. 'கீழே 17-வது மந்த்ரத்தில், '**ब्रह्मज**' [ப்ரஹ்மத்தினிடமிருந்து ஜநித்த] என்று உபக்ரமத்தில் ஜீவனைக் குறிக்கும் லிங்கம் இருக்கிற படியால், அங்கு அப்படி வ்யாக்யாநிக்கப்பட்டது. இவ்விடத்தில் அப்படிப்பட்ட லிங்கமொன்றும் இல்லையாதலால் 'தேவ' ஶப்தத்தின் முக்யார்த்தத்தைக் கைவிடுவது ந்யாயத்திற்கு ஒத்ததாகமாட்டாது.' இதுதான் ஸமாதாநம். அந்த மந்த்ரத்திற்கும் இந்த மந்த்ரத்திற்கும் விஶேஷமாவது—அந்த மந்த்ரத்தில் பரமாத்மாவை ஆத்மாவாக உடைய ஶுத்த ஜீவ ஸ்வரூபம் ப்ரதிபாதிக்கப்படுகின்றது; இந்த மந்த்ரத்திலோவென்றால், ஜீவனை ஶரீரமாக உடைய பரமாத்ம ஸ்வரூபம் ப்ரதிபாதிக்கப்படுகின்றது என்பதுதான். ஆகையால் இவை இரண்டுக்கும் ஐகார்த்ய ஹாநி இல்லை.

13-வது மந்த்ரத்திலுள்ள '**धर्म्यम्**' என்பதற்கு 'கர்மத்தின் பலமாகக் கிடைக்கும்' என்பது பொருள்; அதாவது—'ஶரீரம்'. அதை விட்டபிறகு 'அணுவின்' ப்ராப்தி கிடைக்கின்றது. அதாவது—ஸூக்ஷ்மமாயும் அப்ரதர்க்யமாயும் இருக்கும் பரமாத்மாவை அடைகிறான் என்று சொன்னதாயிற்று. அதற்குப் பிறகு '**मोदनीयं लब्ध्वा**' என்று ப்ரீதி விஷயமான தொன்றைப் பெறுகின்றான் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அதாவது, அபஹத பாப்மத்வம் முதலிய எட்டு குணங்களுடன் கூடிய தனது ஶுத்த ஸ்வரூபம் ஆவிர்ப்பவிக்கின்றது என்று ஏற்படுகின்றது. இந்த க்ரமம் மற்றொரு ஶ்ருதியில் சொல்லப்பட்டிருப்பதற்கு ஒக்கும். "**एष संप्रसादोऽस्माच्छरीरात्समुत्थाय परं ज्योतिरुपसंपद्य स्वेन रूपेणाभिनिष्पद्यते**" [இந்த ஜீவன் இந்த ஶரீரத்தை விட்டுக் கிளம்பி பரஞ்ஜ்யோதிஸ்ஸை அடைந்து தனக்கு இயற்கையாயுள்ள ஶுத்த ஸ்வரூபத்தைப் பெறுகிறான்.] அதாவது—அநாதிகாலமாக மறைந்துகிடந்த தனது ஶுத்த ஸ்வரூபம் வெளிப்படுகின்றது என்பது தாத்பர்யம்.

---

14. இம்மாதிரியான ஆழ்ந்த கருத்தை உடைய வார்த்தைகளைக் கேட்ட நசிகேதஸ்ஸுக்குப் பின்வருமாறு ஶங்கைகள் ஜநித்தன. 'முதல் முதலில் ஶ்ரேயஸ் என்றும் ப்ரேயஸ் என்றும் இரண்டு மார்க்கங்களை ப்ரஸ்தாவித்து, ப்ரேயஸ்ஸை பஹுப்ரகாரமாக நிந்தித்தார். இப்

பொழுது ஶ்ரேயஸ்ஸைப் பற்றி விவரிக்கப் புகுந்தவர், துர்த்தர்ஶமாக ஒரு வஸ்து உண்டென்றும் அது மறைக்கப்பட்டிருக்கிறதென்றும் அதை உபாஸிக்க வேண்டுமென்றும் அந்த உபாஸநம் அத்யாத்மயோகத்தின் பலமாகிற ஜ்ஞாநத்துடன் செய்யப்பட வேண்டுமென்றும், தீரனே அதற்கு அதிகாரி என்றும் அநேக விஷயங்களைப்பற்றிப் பேசுகிறார்; இவையெல்லாம் கர்ம மார்க்கத்தில் ப்ரஸித்தங்களான உபாயாதிகளைக் காட்டிலும் விலக்ஷணங்களாக இருக்கின்றனவே. இவை என்ன? அந்தத் துர்தர்ஶன் யார்? அதை அடைகிறவன் யார்? அடைவதற்கு உபாயம் என்ன? இத்யாதி விஷயங்களை விளங்கச் சொல்லிக் கேட்கவேண்டுமென்று ஆவலுண்டாயிற்று; மறுபடியும் ஒரு ப்ரஶ்நம் செய்கிறான். இது தனிப்பட்ட நான்காவது ப்ரஶ்நமன்று. ஆகையால், 'மூன்று வரங்களை வரித்துக்கொள்' என்றுதர்மராஜன் சொன்ன வார்த்தைக்கு பங்கமில்லை.

கீழ்ச் சொல்லப்பட்டுள்ள விஷயங்களைப்பற்றியே இந்த மந்த்ரத்தில் ப்ரஶ்நங்கள் கேட்கப்படுகின்றன என்பது இதைப் படித்த மாத்ரத்தில் ஏற்படமாட்டாது. சற்று ஊன்றிப் பார்த்தே தாத்பர்யத்தை க்ரஹித்துக் கொள்ள வேண்டும். ஸ்வர்க்க பலத்தைப் பெரிதாகக் கருதி அதைப் பெறும் பொருட்டுகர்ம மார்க்கத்தில் ப்ரவர்த்திப்பவர்கள் கீழே பஹுப்ரகாரமாக நிந்திக்கப்பட்டார்கள்; அந்தக் கர்ம மார்க்கத்தை த்யஜித்து வித்யையைப்பெரிதாக எண்ணின நசிகேதஸ் பஹுப்ரகாரமாகப் புகழப்பட்டான். இது நசிகேதஸ்ஸின் மநஸ்ஸில் நன்றாகப் பதிந்திருத்தல் வேண்டும். அவன் தனது ஸம்ஶயத்தை அறிவித்துக் கொள்ளும் பொழுது தனது மநஸ்ஸில் தலையெடுத்து நிற்கும் மநோபாவத்திற்கு அநுரூபமான சொற்களால் அந்த ஸம்ஶயத்தை வெளியிடுகிறான்.

[ப - ரை] **धर्मात्** - [அல்ப போகங்களை விரும்பும் மனுஷ்யர்களால் அநுஷ்டிக்கப்படும் ப்ரஸித்த] உபாயத்தைக் காட்டிலும், **अन्यत्र यत्** - எதை விலக்ஷணமென்று, **पश्यसि** - பார்க்கிறீரோ [அதாவது - அறிகிறீரோ], **तत्** - அதை, **वद** - [விளங்கச்]சொல்லும். [ஸ்வர்க்கம் முதலான போக ஸ்தாநத்தை அபேக்ஷிப்பவர்களால் அநுஷ்டிக்கப்படும் உபாயமானது யாகம் முதலான கர்மங்கள். அந்த ஸ்வர்க்கத்தை நசிகேதஸ் அபேக்ஷிக்கவில்லை. கீழே '**मत्वा**' என்னும் பதத்தால் ஸூசிப்பிக்கப்பட்ட உபாஸநமாகிற உபாயமே அவனுக்கு அபேக்ஷிதம். அதைப்பற்றியே கேட்கிறான்.]

अधर्मात् - [அல்பமாயும் அஸ்திரமாயுமுள்ள ப்ரஸித்த] உபேயத்தைக் காட்டிலும், **अन्यत्र यत् पश्यसि** - எதை விலக்ஷணமென்று பார்க்கிறீரோ, **तद्वद** - அதைச்சொல்லும். [கர்மங்களைச் செய்பவர்களால் அடையப்படுவது ஸ்வர்க்கம் முதலான பலம். அதை நசிகேதஸ் அபேக்ஷிக்கவில்லை. கீழே '**ध्रुवं तत्**' - என்றும், '**अणुमेतमाप्य**' என்றும், **मोदनीयं लब्ध्वा**' - என்றும், '**अध्यात्मयोगाधिगमेन**' என்றும் குறிக்கப்

பட்ட ப்ரதேஶங்களில் நிர்த்தேஶிக்கப்படும் ப்ராப்யமே அவனுக்கு அபேக்ஷிதம். அது, தனது ஶுத்தஸ்வரூபம் பரமாத்மஸ்வரூபம் முதலியதே. அது ஸ்வர்க்கரூபமான பலத்தைக் காட்டிலும் அத்யந்தம் விலக்ஷணமன்றோ?]

अस्मात् - இதைக்காட்டிலும் [இது புத்திஸ்தனான உபேதாவைக் குறிக்கின்றது], **अन्यत्र यत् पश्यसि** - எதை விலக்ஷணமென்று பார்க்கிறீரோ, **तद्वद** - அதைச்சொல்லும். [ஸ்வர்க்க பலத்தை உத்தேஶித்துக் கர்மங்களைச் செய்யும் ப்ரஸித்த உபேதாவானவன் இந்த்ரியம் முதலியவைகளால் விஶிஷ்டனான பத்த தஶையிலுள்ள போக்தாவாகிற ஜீவன். நசிகேதஸ் அறியவேண்டுமென்று இச்சிக்கும் உபேதாவோ ஶரீர இந்த்ரியங்கள் முதலியவைகளிலிருந்து விடுபட்ட ஶுத்த ஜீவாத்மா. இந்த ஆகாரமே கீழே **धीरः** என்பதால் குறிக்கப்பட்டது. போக தசையில் இருப்பவனும் பிந்தி பலதசையில் இருப்பவனும் வஸ்து ஸ்திதியில் ஒன்றாக இருந்தாலும், ஆகாரத்தில் வைலக்ஷண்யம் உண்டாகையால் '**अस्मादन्यत्र**' [இவனைக்காட்டிலும் வேறு] என்று சொல்லப்பட்டிருக்கிறது.

'**कृताकृतात्**' '**भूताद् भव्याच्च**' என்னும் பதங்கள் '**धर्मात्**' இத்யாதியான மூன்றுக்கும் விஶேஷணங்கள். ப்ரஸித்த உபாயம் முதலானவை மநுஷ்யனுடைய ப்ரயத்நத்தால் ஸாதிக்கத்தகுந்ததாகவும் ஒரு காலத்தில் இருந்து மற்றொரு காலத்தில் இராததாகவும் இருக்கும். மோக்ஷ ஸம்பந்தமான உபாயம் முதலியவை அப்படியல்ல. இதுதான் இந்த விஶேஷணங்களின் பொருள்.

ஸ்ரீ ஶ்ருத ப்ரகாஶிகாசார்யர் இந்த மந்த்ரத்திற்கு முதலில் இம்மாதிரி வ்யாக்யாநம் செய்துவிட்டு, பிறகு இப்படி வ்யாக்யாநிப்பதில் சில அநுபபத்திகள் இருப்பதை ஆலோசித்து, வேறுவிதமாக வ்யாக்யாநமொன்றை அநுக்ரஹித்திருக்கிறார். அந்த அநுபபத்திகள் என்னவென்றால்:—(1) மூலத்தில் நான்கு '**अन्यत्र**' ஶப்தங்கள் இருக்க, வ்யாக்யாநத்தில் மூன்று ஶப்தங்களே அபேக்ஷிதங்களாகையால் அவை மாத்ரம் எடுக்கப்பட்டு மற்றொன்று நிரர்த்தகமாக விடப்பட்டுப் போய்விட்டது. (2) உபாயங்களெல்லாம் காலத்ரய பரிச்சிந்நங்களானபடியால், அவைகளில் '**भूताद्भव्यात् धर्मादन्यत्र**' என்பதால் குறிக்கப்படும் காலத்ரய பரிச்சிந்ந வைலக்ஷண்யம் அந்வயிக்கமாட்டாது. இம்மாதிரியான அநுபபத்திகள் நேராமல் இருக்கும்பொருட்டு அவர் பின்வருமாறு பதங்களை யோஜிக்கிறார்.

अस्माद् धर्मात् ப்ரஸித்த புண்ய கர்மத்தைக் காட்டிலும், **अस्मात् अधर्मात्** - பாப கர்மத்தைக் காட்டிலும், **अन्यत्र यत्** - வேறுபட்ட உபாயம் எதுவோ [உபாஸநமானது புண்ய பாப ரூபங்களான கர்மங்களைக் காட்டிலும் விலக்ஷணம். அந்த உபாஸநமே இவ்விடத்தில் விவக்ஷிதம்.] **तद्वद** - அதைச் சொல்லும். **कृताकृताद् भूताद्भव्याच्च अन्यत्र यत्** -

"सर्वे वेदा यत्पदमामनन्ति तपांसि सर्वाणि च यद्वदन्ति।
यदिच्छन्तो ब्रह्मचर्यं चरन्ति तत्ते पदँ संग्रहेण ब्रवीम्योमित्येतत् ॥ १५॥

காலத்ரயாபரிச்சிந்நமான உபேயம் எதுவோ, **तद्वद** - அதைச் சொல்லும். [இந்த அந்வயத்தில் உபாயமும் உபேயமுமே ப்ரஸ்தாவிக்கப் பட்டிருக்கின்றனவே தவிர, உபேதா ப்ரஸ்தாவிக்கப்படவில்லையே என்று ஒரு ஶங்கை ஜநிக்கலாம். உபேதாவானவன் ஜீவன்; அவன் நித்யன், ஶாத்த தஶையில் அவன் ப்ராப்யனுகிறுன். ஆகையால் ப்ராப்யம் ப்ரஸ்தாவிக்கப்பட்ட விடத்தில் அவனும் ப்ரஸ்தாவிக்கப் பட்டவனுகிறுன். ஆகையால் மூன்றினுடைய ப்ரஶ்நமும் இதில் அடங்கி யுள்ளதென்று அறிந்து கொள்ளவேண்டும்.

இந்த யோஜனையிலும் சில அநுபபத்திகள் தென்படுவதாகத் தோன்றலாம். அவைகள் எல்லாவற்றுக்கும் உசிதமான ஸமாதாநங்கள் உண்டு. க்ரந்தம் விஸ்தரித்து விடும் என்னும் பீதியால் அவை இவ் விடத்திற் சொல்லப்படவில்லை. எந்த யோஜனை எடுக்கப்பட்ட போதிலும், மூன்றின் ப்ரஶ்நமே இந்த மந்தரத்தில் கேட்கப்படுகின்றது என்பது வித்தம்.

---

15. இவ்வாறு ப்ரஶ்நம் செய்யப்பட்டவராய்க் கொண்டு, ம்ருத்யு, "**न जायते म्रियते**" இத்யாதியான மந்த்ரங்களால் விஸ்த்ருதமாக பதில் அளிக்கப்போகிறவராய், முதலில், ஶ்ரோதாவுக்கு அதிஶயித மான ஆதரம் உண்டாவதற்காக ப்ராப்யமாக இருக்கும் பரமாத்மாவின் மேன்மையை வெளிக்காட்டக்கூடிய சில விஷயங்களைச் சொல்லுகிறுர். ஆகையால் 15, 16, 17 இந்த மூன்று மந்த்ரங்களிற் சொல்லப்பட்டுள்ள விஷயங்களெல்லாம், நசிகேதஸ்ஸுக்கு ஒருவித ஆதராதிசயம் ஜநிப்பதற் காகவே.

[ப - ரை.] **सर्वे वेदाः** - எல்லா வேதங்களும், **यत्पदम्** - எந்த ப்ராப்ய ஸ்வரூபத்தை, **आमनन्ति** - ப்ரதிபாதிக்கின்றனவோ, **सर्वाणि तपांसि** - தபஸ்ஸை ப்ரதாநமாகவுடைய மேல்வரும் பாகங்களெல்லாம், **यत्** - எந்த ஸ்வரூபத்தை, **वदन्ति** - சொல்லுகின்றனவோ, **यत्** - எந்த ஸ்வரூபத்தை, **इच्छन्तः** - [அடையவேண்டுமென்று] விரும்பி, **ब्रह्मचर्यं** - ப்ரஹ்மசர்யமாகிற வ்ரதத்தை, **चरन्ति** - அனுஷ்டிக்கிறுர்களோ ['முமுக்ஷுக்கள்' என்று சேர்த்துக் கொள்ளவேண்டும்], **तत्पदं** - அந்த ஸ்வரூபத்தை, **ते** - உனக்கு, **सङ्ग्रहेण** - ஒரு ஶப்த விஶேஷத்தால், **ब्रवीमि** - சொல்லுகிறேன். **ओम् इति** - ப்ரணவமே, **एतत्** - அந்த ஶப்தம்.

पदम् - இதற்கு 'ஸ்வரூபம்' என்பது பொருளாகக் கூறப்பட் டிருக்கின்றது. **पद्यत इति पदम्** [எது அடையப்படுகிறதோ அது பதம்.] ஸ்வரூபமே ப்ராப்யமாகையால் அதுவே 'பத' என்னும் ஶப்தத்தால்

एतद्ध्येवाक्षरं ब्रह्म एतद्ध्येवाक्षरं परम् ।
एतद्ध्येवाक्षरं ज्ञात्वा यो यदिच्छति तस्य तत् ॥ १६ ॥

एतदालंबनं श्रेष्ठमेतदालंबनं परम् ।
एतदालंबनं ज्ञात्वा ब्रह्मलोके महीयते ॥ १७ ॥

சொல்லப்படுகின்றது. **तपांसि** - இதற்கு 'மேல்வரும் உபநிஷத் பாகங்கள்' என்பது பொருள். மேல்வரும் பாகங்கள் தபஸ்ஸை ப்ரதாநமாக ப்ரதிபாதிக்கின்றன. ஆகையால் அம்மாதிரி பொருள் கொள்ளப்பட்டிருக்கிறது.

सङ्ग्रहेण - இதில் 'ஸங்க்ரஹ' என்னும் பதத்திற்கு 'ஶப்தம்' என்பது பொருள். **सङ्गृह्यतेऽनेन इति सङ्ग्रहः** [எதனால் அர்த்த க்ரஹணம் ஏற்படுகின்றதோ அது 'ஸங்க்ரஹம்'; அது ஶப்தமே. இவ்விடத்தில் அந்த ஶப்தம் 'ஓம்' என்பதே. இந்த ஶப்தம் ப்ரஹ்ம வாசகம் என்பது ப்ரஸித்தம். இது தவிர, இந்த ஶப்தத்தின் அவயவங்களாகிற 'அ'காரம் விஷ்ணு வாசகமென்றும் 'ம'காரம் ஜீவ வாசகமென்றும் ஶாஸ்த்ரங்களில் விவரிக்கப்பட்டிருக்கிறபடியால், இதில் ப்ரக்ருத உபாயம் உபேதா இவைகளும் உபதிஷ்டங்கள் என்று அறியவேண்டும்.

16—17. இந்த இரண்டு மந்த்ரங்களும் ப்ரணவத்தைப் புகழ்கின்றன.

[ப - ரை] **एतदक्षरमेव** - இந்த அக்ஷரமே, **ब्रह्म हि** - ப்ரஹ்மமன்றோ? [த்யாநத்திற்கு ப்ரணவம் உபகாரகம்: அந்தத்யாநமே ப்ரஹ்ம ப்ராப்திக்கு ஸாதநமாகிறபடியால், ப்ரணவம் ப்ரஹ்மமென்று சொல்லப்படுகிறது]. **एतदेव** - இதுவே, **परमक्षरम्** - ஜபம் செய்யத் தகுந்த மந்த்ரங்களுள் ஶ்ரேஷ்டம். **एतदक्षरं ज्ञात्वा** - இந்த அக்ஷரத்தையே உபாஸித்து, **यो यदिच्छति** - எவன் எதை விரும்புகிறானோ, **तत् तस्य** - அவனுக்கு அது கிடைக்கின்றது.

एतच्छ्रेष्ठमालंबनम् - இந்த ஓங்கார ரூபமான ஆலம்பநமே [த்யாநத்திற்கு] ஶ்ரேஷ்டம். **एतदालंबनम् परम्** இந்த ஓங்காரத்தை ஆலம்பநமாக உடைய த்யாநமே எல்லாவற்றுக்கும் உயர்ந்தது. **एतदालंबनं ज्ञात्वा** இந்த ஆலம்பநத்தை அறிந்து, **ब्रह्मलोके महीयते** - ப்ரஹ்மலோகத்தில் ப்ரகாசித்துக் கொண்டிருக்கிறான்.

இவ்வாறு மூன்று மந்த்ரங்களால், நசிகேதஸ்ஸுக்கு அதிகமான ஆதரம் ஸித்திக்கும் பொருட்டு ப்ராப்யமாயிருக்கும் பரமாத்மாவின் வைபவத்தைப் புகழ்ந்து பேசி, இப்பொழுது நசிகேதஸ்ஸால் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதில் அளிக்க ஆரம்பிக்கிறார். 18—19 மந்த்ரங்களால் ப்ராப்தாவர்கிற ஜீவனுடைய ஸ்வரூபமும், 20—22 மந்த்ரங்

न जायते म्रियते वा विपश्चिन्नायं कुतश्चिन्न बभूव कश्चित् ।
अजो नित्यश्शाश्वतोऽयं पुराणो न हन्यते हन्यमाने शरीरे ॥ १८ ॥

களால் ஜீவனுக்கு ஆத்மாவாக இருக்கும் பரமாத்ம ஸ்வரூபமும், 23-வது மந்த்ரத்தால் உபாய ஸ்வரூபமும் விளக்கப்படுகின்றன 24-வது மந்த்ரம் அந்த உபாயத்திற்கு அங்கமாக சில ஸாமாந்ய தர்மங்களைச் சொல்கின்றது. 25 வது மந்த்ரம் பரமாத்மாவின் பெருமை வாங் மநஸ்ஸுக்கு எட்டாதது என்று சொல்லி இந்த இரண்டாவது வல்லியை முடிக்கின்றது.

---

18. [ப - ரை] **विपश्चित् अयं** - விபஶ்சித்தாக இருக்கும் தன்மைக்கு அர்ஹனுயிருக்கும் இந்த ஜீவன், **न जायते म्रियते वा** - [இப்பொழுதும், அதாவது விபஶ்சித்தாக இராமல் இருக்கும் பொழுதும்] ஜநந மரணங்களற்றவன். **अयं कुतश्चिद् न** - இவன் ஒருவிடத்திலிருந்தும் உத்பாதநம் செய்யப்பட்டவனன்று. **न कश्चिद् बभूव** - இதற்கு முன்னும் ஜநந ஶூந்யன். **अजः** — உற்பத்தியற்றவன் [இது '**न जायते**' என்பதற்கு ஹேது]. **नित्यः**—உத்பத்தியற்றவனுனதால் நஶிக்கும் தன்மையுமில்லை. [இது '**न म्रियते**' என்பதற்கு ஹேது]. **शाश्वतः**—ஶாஶ்வதமாக இருப்பவன் [இது **न कुतश्चित्** என்பதற்கு ஹேது]. **पुराणः**—அநாதியாக இருப்பவன் [இது '**न कश्चिद् बभूम**' என்பதற்கு ஹேது]. **शरीरे हन्यमाने [सति]** ஶரீரம் நாஶமடையும் பொழுதும், **न हन्यते** - [இவன்] நாஶம் அடைகிறதில்லை. [இவன் ஶரீரத்தில் அந்தர்வர்த்தியாயிருக்கிறபடியால் ஶரீரம் நஶிக்கும் காலத்தில் இவனும் நஶிக்கவேண்டுமன்றோ என்னும் ஸந்தேஹம் வர, 'அப்படி இல்லை' என்று இந்தக் கடைசி வாக்யம் சொல்லுகின்றது]

विपश्चित् विविधं पश्यन्ती चित् यस्य [ஸங்கோசமற்ற ஸர்வ விஷயகமான ஜ்ஞாநம் எவனிடம் இருக்கிறதோ அவன் 'விபஶ்சித்'] என்று இந்தப் பதம் வ்யுத்பந்நமாயிருக்கிறபடியால், இது ஶுத்த ஜீவனையே குறிக்கும். பத்த ஜீவனுக்கு அப்படிப்பட்ட அஸங்குசித ஸர்வ விஷயக ஜ்ஞாநம் அஸம்பாவிதம். 'ஶுத்தனுக இருக்கும் தஶையில் மாத்ரம் இவன் ஜநந மரணமற்றவன் என்பதில்லை; பத்த தஶையிலும் அப்படிப்பட்டவன்' என்பதைக் குறிக்கின்றது '**विपश्चित् अयं न जायते म्रियते वा**' என்னும் வாக்யம். இந்த வாக்யத்தில் '**वा**' என்பது '**च**' என்னும் பதத்தின் அர்த்தமுடையது. **न जायते, न च म्रियते**.

இந்த மந்த்ரம் பகவத்கீதையில் ஸ்வல்ப மாறுதலுடன் காணப்படுகின்றது. "**न जायते म्रियते वा कदाचिन्नायं भूत्वा भविता वा न भूयः** என்பது கீதா வாக்யம். அவ்விடத்தில் 'ஜீவன் ஜநந மரண ஶூந்யன்' என்னும் கேவல ப்ரதிஜ்ஞை மாத்ரமன்று; கீழ்ச் சொல்லப்பட்ட அவிநாஶித்வம் முதலிய ஹேதுக்களால் அவன் ஜநந மரணமற்றவனென்பது ஸித்திக்

ஸ்ரீ :

சந்தா செலுத்தினவர்களின் பெயர்

1—5—'43 to 31—5—'43

[மற்றவர்களும் க்ருபை செய்து சீக்ரத்தில் சந்தாவைச் செலுத்த வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.]

For 1942.

		Rs.	
1.	Sri P. Narasimha Iyengar, Kasangulam, West Bank, Pattukottai ...	3	0
2.	,, R. Gopalachariar, Vidwan, Ahobila Mutt, Tirupullani ...	3	0
3.	(By adjustment through Math) Sri S. Narayana Iyengar, Tahsildar, Thirukkoilur ...	3	0

For 1943.

		Rs.	
1.	Sri V. R. Thathachariar, Cuddalore ...	1	0
2.	,, D. T. Ananthachariar, Damal Post ...	3	0
3.	,, Thyyur Krishnamachariar, Sembiam ...	2	0
4.	,, K. S. Ramanujachariar, Kaveripakkam ...	3	0
5.	,, A. Srinivasaraghava Iyengar, Srirangam ...	3	0
6.	,, S. Sundararaja Iyengar, Aharam, Tirupullani ...	3	0
7.	,, S. Narayana Iyengar, Tenkasi, Tinnevelly ...	3	0
8.	,, S. R. Iyengar, Matunga, Bombay ...	3	0
9.	,, C. V. Rangachariar, B.A., Bangalore ...	3	0
10.	,, K. V. Sesha Iyengar, Gopalapuram, Madras ...	3	0
11.	,, K. Parthasarathy, Tata Oil Mills, Bombay ...	3	0
12.	,, Palaveri Krishnamachariar, Trivellore ...	3	0
13.	,, K. Srinivasaraghava Iyengar, Kovilvenni ...	3	0
14.	,, T. R. Srinivasa Iyengar, Kovilvenni ...	3	0
15.	,, V. Ramaswami Iyengar, Tindivanam ...	3	0
16.	,, C. M. Venkataraghavachariar, Hyderabad ...	3	0
17.	,, R. Rama Iyengar, Burma Shell, Madras ...	3	0
18.	,, K. K. Srinivasa Iyengar, Ambasamudram ...	3	0
19.	,, K. V. Srinivasa Gopaladesikachariar, Kulitali ...	1	0
	Do. By adjustment through Math ...	2	0
20.	,, A. S. Krishnaswami Iyengar, Aviyur, Thirukkoilur ...	3	0
21.	,, K. S. Sundararaja Iyengar, Kovilvenni, Tanjore District ...	3	0
22.	,, K. S. Rangaswami Iyengar, 8, Kesavaperumal Sannidhi Street, Mylapore ...	3	0
23.	,, C. R. Srinivasa Iyengar, Teacher, Board High School, Kaveripakkam ...	3	0

(இந்த ஸஞ்சிகையுடன் பதினெட்டு ஸஞ்சிகைகள் வெளியாகி இருக்கின்றன. 1942-வது வருஷத்திய சந்தாவைச் செலுத்தாதவர்களுக்கு ஸஞ்சிகை அனுப்பப்பட மாட்டாது)

Regd. No. M. 4437

ஸ்ரீ:

1. நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி.

பூர்வர்களின் வ்யாக்யாநங்களை அநுஸரித்து அவைகளில் ஓர் அம்ஸத்தையும் விடாமல் எளிய தமிழ் நடையில் ஸ்ரீ. உப. வே. திவான் பஹதூர் வி. கே. ராமாநுஜாசார்ய ஸ்வாமியால் எழுதப்பட்டது. திருவாய் மொழியின் ஸாரார்த்த ஸங்க்ரஹமான அத்புத அவதாரிகை, தமிழ் இலக்கணச் சுருக்கம், யாப்பி இலக்கணச் சுருக்கம், அரும்பத உரை, ஆங்காங்கு உதாஹரிக்கப்பட்ட பகவதவதாரக் கதைகளின் சுருக்கம், கண்ணிநுண் சிறுத்தாம்பின் பொழிப்புரை முதலிய அநுபந்தங்களுடன் கூடியது.

12 ஸஞ்சிகைகள்	விலை ரூ.	6—0—0
மூன்று ஸம்புடங்களாக பைண்டு செய்தது	,,	9—0—0

---

2. யதீந்த்ர மத தீபிகை.

ஸ்ரீ. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியால் ஸம்ஸ்க்ருதத்தில் அருளிச் செய்யப்பட்டது. இதற்குத் தமிழ் உரையுடனும், ந்யாய பரிசுத்தி, ந்யாய ஸித்தாஞ்ஜநம், தத்வ முக்தா கலாபம் ஆகிய க்ரந்தங்களிலிருந்து எழுதப்பட்ட குறிப்புக்களுடனும், 16 அநுபந்தங்களுடனும் கூடினது. ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தத்தின் முக்கியமான எல்லா விஷயங்களையும் ஸுலபமாய் அறிவதற்கு இன்றியமையாதது. இதுவும் ஸ்ரீ. உப. வே. திவான் பஹதூர் வி. கே. ராமாநுஜசார்ய ஸ்வாமியால் எழுதப்பட்டது.

4 ஸஞ்சிகைகள்	விலை ரூ.	3—8—0
பைண்டு செய்தது	,,	4—8—0

இரண்டுக்கும் தபால் செலவு வேறு

★

பின்வரும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம் :—

ஸ்ரீ. சி. ர. ஸ்ரீநிவாஸ பாட்ராசார்யர்,
ஸ்ரீநிவாஸ விலாஸ புஸ்தகஸாலை,
47, பாட்ராசார்ய தெரு, கும்பகோணம்.

ஸ்ரீ:

ஆர்காட் ப்ரெஸ், 27 புது அக்ரஹாரம், விழுப்புரம்,

(தென் ஆர்காட் ஜில்லா). ப்ரமுகர்களான பல ஸ்ரீ வைஷ்ணவர்கள் உதவியால், ஷை அச்சுக்கூடம் புதிதாக ஆரம்பித்துள்ளோம். தேவ நாகரம், ஹிந்தி, க்ரந்தம், தமிழ், இங்கிலீஷ் அச்சுவேலைகளும், எல்லா விதமான ரூலிங் பைன்டிங் வேலைகளும் அதி விரைவாகவும் அழகாகவும் செய்து தருவோம். ஸ்ரீ வைஷ்ணவர்களின் ஆதரவைக் கோருகிறோம்.

Printed by K. Sadagopachariar, at the Liberty Press, 10, Linghi Chetty Street, G. T., Madras.
Edited & Published by S. Vasudevachariar, 5, Ramasami Street, Tyagarayanagar, Madras.